# தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் மழை வாய்ப்பு

**சென்னை,**

வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தின் காரணமாக வட தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலின் மத்திய கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவானது. இது இப்போது வடகிழக்கு திசையில் மெதுவாக நகர்ந்து வருகிறது.

இதன் காரணமாகவும், வெப்பச்சலனத்தின் காரணமாகவும் வடதமிழகத்தின் பல இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும். தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந் நிலையில், வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 100 மி.மீ. மழை பெய்துள்ளது. விழுப்புரம், விருதுநகர், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்துள்ளது.

## கத்திரி வெயில்: சென்னையில் 108 டிகிரி

**சென்னை,**

தமிழகத்தில் கத்திரி வெயில் உக்கிரமடைந்து வரும் நிலையில் சென்னையில் வியாழக்கிழமை 108 டிகிரி பதிவானது.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக கத்திரி வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக சென்னையில் அதிகபட்சமாக 108 டிகிரி வெயில்

பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு சென்னையில் பதிவான வெயிலில் இதுவே அதிகம்.

இதேபோல, கடலூர், கரூர் பரமத்தி, பாளையங்கோட்டை, புதுச்சேரி, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

**வியாழக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):**

சென்னை 108

வேலூர் 106

புதுச்சேரி, கரூர் பரமத்தி, கடலூர் 104

திருச்சி 103

பாளையங்கோட்டை 101

மதுரை, சேலம் 98

தருமபுரி 97

கோவை 96

கொடைக்கானல் 71.

## வேளாண் அலுவலர்களுக்கு விரைவில் டேப்லெட் கணினி

**மதுரை,**

பயிர்களில் பூச்சி, நோய்த் தாக்கத்தைக் கண்டறிந்து அதற்கான பரிந்துரைகளை விவசாயிகளுக்கு உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் வேளாண் உதவி அலுவலர்களுக்கு டேப்லெட் கணினி வழங்கப்பட இருக்கிறது.

விவசாயிகளுக்கான திட்டங்களையும், மண்வளம்-கால நிலைக்கு ஏற்ற பயிர் ரகங்கள் குறித்தும், இடுபொருள்கள் விநியோகம், இருப்பு ஆகியன குறித்தும் விவசாயிகளிடம் கொண்டு செல்லும் பணியில் வேளாண் உதவி அலுவலர்கள் செயலாற்றி வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டாரத்துக்கு தலா ஒரு வேளாண் விரிவாக்க மையம் மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப துணை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு மானிய

விலையில் விதை, உரம், பூச்சிகொல்லி மருந்துகள் இங்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், வேளாண்மை தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. வேளாண் துறையின் சேவைகளில் கணினி மயமாக்கல் ஒவ்வொரு கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த இரு ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் வட்டாரம் வாரியாக உள்ள விவசாயிகளின் முழு விவரமும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 47 ஆயிரத்து 50 விவசாயிகளின் தகவல்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளின் செல்போன் எண்களும் பதிவு செய்யப்படுகின்றன. வேளாண் பல்கலைக்கழகத்தின் இணையதளம் வாயிலாக அவ்வப்போது வேளாண் வானிலை அறிக்கை உள்ளிட்ட தகவல்கள் குறுந்தகவல்களாக விவசாயிகளின் செல்போன் எண்ணுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, வேளாண் விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்யப்படும் இடுபொருள்களுக்கான ரசீது கணினி மூலம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, விவசாயியின் பெயர், அவருக்குரிய நிலங்கள் உள்ளிட்ட விவரங்கள் கணினியில் பதிவு செய்து வைத்திருப்பதால், விவசாயியின் பெயரைக் குறிப்பிட்டவுடன் அவரது நிலத்தின் அளவுக்கு ஏற்ப விதை பரிந்துரை அட்டவணை கணினியில் பெறப்பட்டு ஆன்லைனில் ரசீதும் கிடைத்துவிடும். இடுபொருள்கள் விநியோகம் ஆன்லைனில் மேற்கொள்ள இருப்பதால், இதில் முறைகேடு செய்வதற்கு வாய்ப்புகள் குறைவு என்று வேளாண் துறையினர் கூறுகின்றனர். அதேபோல, விவசாயிகளும் தங்களது நிலப்பரப்பு குறி6த்து தவறான தகவல்களைக் கூறி இடுபொருள்கள் பெற்றுச் செல்ல முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பயிர் நோய், பூச்சிகள் தாக்கம் குறித்து அறிய வந்ததும் அதற்கான பரிந்துரைகளை உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிப்பதற்காக வேளாண் உதவி அலுவலர்களுக்கு விரைவில் டேப்லெட் கணினி வழங்கப்பட இருக்கிறது. இதில் பயிர்நோய், பூச்சி தாக்கம் தொடர்பான பரிந்துரைக்கென தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ள மென்பொருள் அந்த டேப்லெட் கணினியில் இணைத்து வழங்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை கூறியது:

கள ஆய்வுக்குச் செல்லும் வேளாண் உதவி அலுவலர்கள் நோய்த் தாக்கம் அடைந்த பயிர், பூச்சி தாக்கிய பயிர்கள் குறித்து தெரியவந்தால் அவற்றை டேப்லெட் கணினியில் புகைப்படம் எடுத்து அந்த மென்பொருளில் அப்லோட் செய்தால், மேற்படி நோய்த் தாக்கம் பற்றிய விவரம் தெரியவரும். மேலும், நோய்த் தாக்கம் அல்லது பூச்சி பாதிப்புக்கான பரிந்துரைகளும் அதிலேயே இடம்பெறும். விவசாயிகள் உடனுக்குடன் பயிர்களின் நிலையைத் தெரிந்து கொள்வதால் பூச்சிகொல்லி மருந்துகள் அல்லது வேறேதும் இடுபொருள்களின் தேவையை அறிந்து கொண்டு அதற்கேற்ப விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியும். இதனால் பயிர்களின் மகசூலை அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படும். மதுரை மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களில் தலா 5 வேளாண் உதவி அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் 65 பேருக்கும் விரைவில் டேப்லெட் கணினி வழங்கப்பட உள்ளது என்றார்.

## விருத்தாசலம் அருகே 80 கிலோ பலாப்பழம்!




**விருத்தாசலம்,**

விருத்தாசலத்தை அடுத்த கோபாலபுரத்தைச் சேர்ந்தவர் துரைராஜ். இவரது பலாத் தோட்டத்தில் இருந்த பலா மரத்தில் 4 பழங்கள் காய்த்திருந்தன. அவற்றில் ஒன்றை பறித்தபோது, அது அளவில் பெரியதாகவும், 80 கிலோ எடையுடனும் இருந்தது.

பெரும்பாலும் பலாப்பழங்கள் சுமார் 35 கிலோ எடைதான் இருக்கும். ஆனால், இந்த பழம் வழக்கத்துக்கு மாறாக பெரியதாக இருந்ததால், சுற்றுவட்டார மக்கள்

கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துச் சென்றனர். அதே மரத்தில் இருந்த மற்ற 3 பழங்கள் சுமார் 55 கிலோ எடை வரை இருக்கும் என துரைராஜ் தெரிவித்தார்.

## காஞ்சிபுரத்தில் சூறைகாற்றுடன் கனமழை

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரத்தில் வியாழக்கிழமை மாலை திடீரென சூறைக்காற்றுடன் கனமழை பெய்தது. காஞ்சிபுரத்தில் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் லேசான மழை பெய்யத் தொடங்கியது. அப்போது கடும் சூறைக்காற்றும் வீசியது. பின்னர் கனமழை பெய்தது.

சூறைக்காற்றால் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. காஞ்சிபுரம் நகராட்சி தலைமை பொறியாளர் அலுவலகக் கட்டத்தின் மாடியில் வைக்கப்பட்டிருந்த "ஆன்லைன்' டவர் சரிந்து விழுந்தது. இதேபோல் காவலர் குடியிருப்பில் ஆலமரம் ஒன்று வேரோடு சாய்ந்தது.காஞ்சிபுரத்தை அடுத்த வாலாஜாபாத் சாலையில் வெண்குடி டாஸ்மாக் எதிரே புளியமரம் வேரோடு சாய்ந்தது.இதில் ஒரு மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது.

மேலும் அந்த சாலையில் சுமார் அரை மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் செங்கல்பட்டு, தாம்பரம் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் கடும் அவதிக்குள்ளாயினர்.தகவலறிந்த காஞ்சிபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் படை வீரர்கள் அங்கு வந்து மரத்தை அப்புறப்படுத்தினர்.

இதே போல் காஞ்சிபுரம் மற்றும் சுற்று கிராமங்களில் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.இதனால் மாலை 4 மணியிலிருந்தே நகரின் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திண்டுக்கல்,**

விவசாயிகள் தங்களது குறைகளை தெரிவிப்பதற்கு வசதியாக மாதந்தோறும் நடைபெறும் குறைதீர் கூட்டம், வெள்ளிக்கிழமை (மே 23) முதல் மீண்டும் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளது:

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, கடந்த 2 மாதங்களாக விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்படாமல் இருந்து வந்தது. இந்த நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டதால், மீண்டும் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. மே மாதத்துக்கான குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதில், கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கு பதில் அளிக்கப்படும்.

எனவே, அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## 3 லட்சம் பூக்கள் இடம்பெறும் மலர் கண்காட்சி

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் இந்த ஆண்டு கோடை விழா வரும் 25ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஜூன் 3ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளதாவது:

கொடைக்கானலில் ஆண்டுதோறும் கோடை விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. கோடை விழாவை, நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் முதல் நாளான 25ஆம் தேதி துவக்கி வைக்கிறார். மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் நத்தம் இரா. விசுவநாதன் மலர் கண்காட்சியினை தொடங்கி வைக்கிறார். சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைக்கிறார்.

மேலும், இந்த விழாவில், மக்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர்.

தொடர்ந்து, கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 56 வகையான 3 லட்சம் மலர்களைக் கொண்டு கண்கவரும் வகையில் மலர் கண்காட்சி அமைக்கப்படுகிறது. மேலும், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலர்களைக் கொண்டு

பிரமீடு, இந்திரன் யானை உள்ளிட்ட உருவங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி, தேனி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து தோட்டக்கலைத் துறையினர் அரியவகை மலர்களைக் கொண்டு கண்காட்சி அரங்குகள் அமைத்து வருகின்றனர். இது தவிர, பலவிதமான காய்கறிகளால் பல்வேறு வகையான அலங்காரங்கள் மற்றும் 20-க்கும் மேற்பட்ட அரசுத் துறை கண்காட்சி அரங்குகள் அமைக்கப்படுகின்றன.

கோடை விழா தொடக்க நாள் முதல், தினமும் படகுப் போட்டிகள், நாய் கண்காட்சி, மீன் பிடிக்கும் போட்டி, சைக்கிள் போட்டி, குதிரைப் போட்டி, படகு அலங்காரப் போட்டி, கால்பந்துப் போட்டி, கபடிப் போட்டி, கோலப் போட்டி, மினி மாரத்தான் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும், கிராமிய கலைநிகழ்ச்சிகள், பல்சுவை இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், மெல்லிசைக் கச்சேரிகள், ஒயிலாட்டம், தற்காப்பு கலை நிகழ்ச்சிகள், மேஜிக் ஷோ, நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடத்தப்படுகின்றன.

இவை அனைத்தும், கோடை விழா நிறைவு நாள் வரை பிரையண்ட் பூங்கா, மூஞ்சிக்கல் மைதானம், கொடைக்கானல் ஏரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலுக்கு வந்து செல்ல, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் பழனி, மதுரை, திண்டுக்கல், வத்தலகுண்டு, தேனி ஆகிய பகுதிகளிலிருந்து 17 சிறப்பு பேருந்துகளும், கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து பிரையண்ட் பார்க் , செட்டியார் பார்க், பைன் பாரஸ்ட், பசுமைப் பள்ளத்தாக்கு, பேரிஜம், லேக்வியூ உள்ளிட்ட பல்வேறு பகுதிகளையும் ரூ. 80 கட்டணத்தில் சுற்றிப் பார்க்கும் வகையில், 10 அரசு பேருந்துகள் என மொத்தம் 27 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

கொடைக்கானல் நகராட்சி நிர்வாகம் மூலம் தங்கும் விடுதிகள், உணவகங்களில் சுகாதாரமான உணவு மற்றும் நியாயமான விலைப் பட்டியல்களை கடைபிடிக்கவும், கொடைக்கானலின் அனைத்து பகுதிகளையும் தூய்மையாக வைத்திடவும், பாலித்தீன் பயன்பாடு இல்லாத வகையில் கண்காணித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவத் துறையின் மூலம் 2 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, சுற்றுலாப்

பயணிகளின் பாதுகாப்புக்காக பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறை மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேவையான இடங்களில் கூடுதல் போலீஸ் பாதுகாப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, சுற்றுலாப் பயணிகள் அனைவரும் இந்த கோடை விழாவில் கலந்துகொள்ளுமாறு, மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கொடைக்கானலில் சொட்டு நீர்ப்பாசன முறையில் விவசாயப் பணிகள்

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால், சொட்டு நீர்ப்பாசன முறையில் விவசாயப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொடைக்கானல் பகுதிகளில் முக்கியத் தொழிலாக விவசாயம் உள்ளது. இங்கிருந்து உருளைக் கிழங்கு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, பீன்ஸ், பூண்டு மற்றும் பழ வகைகள் சாகுபடி செய்யப்பட்டு, வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. கொடைக்கானலில் ஆண்டுக்கு சுமார் 1600 மி.மீ. அளவு மழை பெய்யவேண்டும். ஆனால், கடந்தாண்டு சுமார் 540 மி.மீ. அளவே மழை பெய்தது.

மேலும், கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துள்ளதால், விவசாயப் பணிகளில் பெருமளவு சரிவு ஏற்பட்டு, விவசாயிகள் நஷ்டமடைந்தனர். இதனால், விவசாய நிலங்கள் பெருமளவு விற்பனை செய்யப்பட்டு, அப்பகுதிகளில் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. 10 முதல் 25 ஏக்கர் வரை வைத்துள்ள பெரும் விவசாயிகள், கிணறு, மோட்டார், மற்றும் சொட்டு நீர்ப்பாசன மூலம் விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலங்களில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், கேரட் போன்ற அதிக பராமரிப்பு தேவைப்படும் காய்கறிகளை உற்பத்தி செய்து, நல்ல விலைக்கு விற்று வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: கொடைக்கானல் நகர் மற்றும் விவசாயம் நடைபெறும் பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதால், மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காமல் கீழே செல்கிறது. இதனால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் இல்லை.

நீரோடைகளும் வற்றிப் போயுள்ளன. அவ்வப்போது பெய்யும் மழையின் மூலம் விவசாயப் பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வசதியுள்ளவர்களே சொட்டு நீர்ப்பாசன முறையில் விவசாயம் செய்து வருகின்றனர். இதனால், சாதாரண விவசாயிகள் நிலத்தை பராமரிக்க முடியாமல் விற்பனை செய்து விடுகின்றனர். எனவே, விவசாய நிலங்களின் பரப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. குளுமையான சீதோஷ்ண நிலை மாறி, மழையளவும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது.

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் சோலா மரங்கள், பழ வகை மரங்கள் நடுவதற்கும், விவசாய நிலங்களில் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டுவதை ஆய்வு செய்யவும், சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான், விவசாய நிலங்களை பாதுகாக்க முடியும். இல்லையெனில், வருங்காலத்தில் கொடைக்கானலில் எங்கு பார்த்தாலும் சிமெண்ட் கட்டடங்கள் மட்டுமே இருக்கும் என்றனர்.

## கொடைக்கானலில் வால் பேரிக்காய் விளைச்சல் குறைவு: விலை அதிகம்

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் பருவமழை பெய்யாததால், வால் பேரிக்காய் விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. இதனால், விலை அதிகரித்துள்ளது.

கொடைக்கானலில் பேரி, பிளம்ஸ், செர்ரி புரூட், மரத் தக்காளி, பலா போன்றவைகள் விளைகின்றன. இதில், வால் பேரிக்காய் கொடைக்கானல் பகுதிகளான பெரும்பள்ளம், சின்னப்பள்ளம், குருசடிமெத்து, அஞ்சுவீடு, பேத்துப்பாறை, அடுக்கம், பாலமலை, தாமரைக்குளம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றன.

கடந்த 3 ஆண்டுகளாகவே போதிய பருவமழை இல்லாததால், பழங்களின் விளைச்சல் வெகுவாகக் குறைந்து வருகிறது. இதில், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் வளரும் பேரிக்காயில் சாதாரண பேரி, முள்பேரி, தண்ணீர் பேரி, வால்பேரி, இனிப்பு பேரி, ஊட்டி பேரி போன்றவைகள் விளைகின்றன.

இவற்றுள், வால்பேரி நல்ல சுவையாக இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தற்போது, பருவமழை இல்லாததால் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளது. கிலோ ரூ. 50 முதல் ரூ. 60 வரைக்கும் விற்கப்பட்ட வால்பேரி, தற்போது ரூ. 120 முதல் ரூ. 160 வரை விற்பனையாகிறது.

இது குறித்து, விவசாயிகள் கூறுகையில், கொடைக்கானலில் ஊடு பயிராக பேரிக்காய், அவக்கேடோ, பலா போன்ற மரங்களை பராமரித்து வருவதால், அந்தந்தக் காலங்களில் வரும் காய்களை விற்பனை செய்து வருவது வழக்கம். தற்போது, வால்பேரிக்காய் சீசனாக இருந்தும், பருவமழை இல்லாத காரணத்தால் விளைச்சல் வெகுவாக பாதிப்பு அடைந்துள்ளது. இதனால், விலை அதிகமாக உள்ளது என்றனர்.

## மீன்பிடி விசைப்படகுகளில் அதிகாரிகள் ஆய்வு

**ராமேசுவரம்,**

ராமேசுவரம் பகுதியில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளில் மீன்பிடிக்க படகுகள் தகுதியாக உள்ளனவா என கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளில் மீன்வளத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

ராமேசுவரம் பகுதியில் 700-க்கு மேற்பட்ட விசைப்படகுகள் உள்ளன. இப் படகுகளில் மீனவர்கள் ஒருநாள் விட்டு ஒருநாள் சுழற்சி முறையில் மீன் பிடிக்க கடலுக்குச் சென்று வருகின்றனர்.

தற்போது 45 நாள்கள் மீன்பிடி தடைக் காலம் அமலில் இருப்பதால், கடந்த ஏப்ரல் 13ஆம் தேதி முதல் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை.

மீன் பிடி தடைக் காலத்தைப் பயன்படுத்தி மீனவர்கள் விசைப்படகுகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு, மீன் பிடிக்க தயாரான நிலையில் படகுகளை நிறுத்தி உள்ளனர். இந்த நிலையில் ராமேசுவரம் மீனவளத் துறை அதிகாரிகள் கடலில் நிறுத்தி வைத்துள்ள விசைப்படகுகளை வியாழக்கிழமை காலை ஆய்வு மேற்கொண்னர். படகின் நீளம், அகலம், என்ஜின் திறன் மற்றும் மீன்பிடி சாதனங்கள், படகு உரிமைச் சான்றிதழ் ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

## <u>குறை தீர்க்கும் கூட்டங்கள் வழக்கம்போல் நடைபெறும்: ஆட்சியர்</u>

**ராமநாதபுரம்,**

மக்களவைத் தேர்தல் முடிவுற்று விட்டதால் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் வேளாண் குறை தீர்க்கும் கூட்டம் மற்றும் திங்கள்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் ஆகியன வழக்கம் போல நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ராமநாதபுரம் மாவட்ட பொதுமக்களின் அத்தியாவசிய கோரிக்கைகள், பிரச்னைகளை தீர்த்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடம் மனுக்கள் பெறுவது மக்களவைத் தேர்தல் நடைபெறுவதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகளின்

கீழ் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது தேர்தல் முடிவுற்ற நிலையில் வெள்ளிக்கிழமை(மே 23) விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டமும், இனி வரும் திங்கள்கிழமைகளில் வாரம் தோறும் மக்கள் குறை தீர்க்கும் கூட்டமும் வழக்கம் போல நடைபெறும்.

இவை தவிர மாதம் தோறும் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் கூட்டம், மக்கள் தொடர்புத் திட்ட முகாம் மற்றும் அம்மா திட்ட முகாம்கள் ஆகியனவும் வழக்கம் போல தொடர்ந்து நடைபெறும் எனவும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>பல்லடம் கறிக்கோழி விலையில் மாற்றமில்லை</u>

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 65-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் வியாழக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.15, சென்னையில் ரூ. 3.57.

## திருப்பூர் மாவட்டத்தில் சராசரி மழை அளவு 8.86 மி.மீ.

**திருப்பூர்,**

மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 8.86 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை விவரம் (மில்லிமீட்டரில்):

திருப்பூர் 33, அவிநாசி 26.5, பல்லடம் 2.8, மொத்த மழை அளவு 62 மி.மீ., சராசரி மழை அளவு 8.86 மி.மீ. பதிவாகி உள்ளது.

## அவிநாசியில் ரூ. 6.60 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகத்தில் புதன்கிழமை ரூ. 6.60 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

ஏ.சி.எம்.எஸ். ஏல மைத்தியத்தில் நடைபெற்ற ஏலத்திற்கு 650 பருத்தி மூட்டைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ. 4,900 முதல் ரூ. 5300 வரையிலும், டி.சி.எச். ரகப் பருத்தி ரூ. 4,600 முதல் ரூ. 4,900 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,600 முதல் ரூ. 3,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 6.60 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதில் குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 89 பருத்தி விவசாயிகளும், 7 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## 28-இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

**திருப்பூர்,**

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 28-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 28-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், 11 மணியளவில் நடைபெற உள்ளது. .

இதில், விவசாயிகள் பங்கேற்று தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம்.

## கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு மகாராஷ்டிர வியாபாரிகள் வருகை அதிகரிப்பு

**ஈரோடு,**

ஈரோடு அருகே கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு மகாராஷ்டிர வியாபாரிகள் அதிக அளவில் வரத் தொடங்கியுள்ளனர்.

வாரந்தோறும் புதன்கிழமை நடைபெறும் சந்தையில் இறைச்சிக்கான மாடுகள், எருமைகளும், வியாழக்கிழமைதோறும் வளர்ப்புக்கான மாடுகள், எருமைகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஈரோடு, நாமக்கல், கரூர், திண்டுக்கல், திருச்சி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளை இச் சந்தையில் விற்பனை செய்கின்றனர். தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம், கோவா மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இவற்றை வாங்கிச் செல்வது வழக்கம்.

சில வாரங்களாக இச் சந்தைக்கு மகாராஷ்டிர மாநில வியாபாரிகளின் வருகை அதிகரித்து வருகிறது. இங்கிருந்து வாங்கிச் செல்லும் மாடுகளை அங்குள்ள சந்தைகளில் நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடிவதால் அங்கிருந்து ஏராளமான வியாபாரிகள் வரத் தொடங்கியுள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வாரம் சந்தைக்கு 400 பசுக்களும், 350 எருமைகளும் விலைக்கு வந்ததாகவும், பசு மாடு ரூ.16,000 முதல் ரூ.32,000 வரையும், எருமை ரூ.18,000 முதல் ரூ.34,000 வரையும் விலைபோனதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## நாமக்கல்லில் ரூ.20 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**நாமக்கல்,**

நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு கடந்த வாரத்தைவிட குறைந்த அளவிலேயே பருத்தி மூட்டைகள் வரப் பெற்றன. ஏலத்தின் மூலம் அவை மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டன . நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி அருகே உள்ள சேலம், கரூர், திருச்சி மாவட்டங்களில் இருந்தும் பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்படுகின்றன. இதன்படி, வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 1200 மூட்டை பருத்திகள் வரப் பெற்றிருந்தன. இவற்றில் ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4519 முதல் 5419 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5459 முதல் ரூ.5589 வரையும் விற்பனையாகின.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 2000 மூட்டை பருத்திகள் வரப் பெற்றன. இவற்றில், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4900 முதல் ரூ.5400 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5750 முதல் ரூ.6500 வரையும் என மொத்தம் ரூ.30 லட்சத்துக்கு விற்பனையாகின. இதன்படி, கடந்த வாரத்தைவிட இந்த வாரம் பருத்தி வரத்து குறைந்ததற்கு அறுவடை பருவம் முடிந்திருப்பது காரணமாக இருக்கலாம் என்று கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## மே 26 முதல் குறைதீர் கூட்டம்: ஆட்சியர்

**திருச்சி,**

தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதை தொடர்ந்து மே 26-ம் தேதி முதல் குறைதீர் கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மார்ச் 5-ம் தேதி மக்களவைத் தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் அறிவித்ததைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் அனைத்து குறைதீர்கூட்டங்களும் ஒத்தி வைக்கப்பட்டன. தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் குறைதீர் கூட்டம், சிறப்பு மனுநீதி நாள் முகாம், விவசாயிகள் குறைதீர்கூட்டம், அம்மா திட்ட முகாம் ஆகியவை வரும் 26-ம் தேதி முதல் நடைபெறும்.

எனவே பொதுமக்கள்தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை சம்பந்தப்பட்ட கூட்டங்களில் அளித்து பயன்பெறலாம் என அச்செய்திக்குறிப்பில் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## 29 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் குறுவைப் பருவத்தில் 29 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்தார்.

கும்பகோணம் அருகேயுள்ள சாக்கோட்டையில் உள்ள உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தை, வியாழக்கிழமை ஆய்வு செய்த அவர், அங்கு செய்தியாளர்களிடம் கூறியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் குறுவை பருவத்தில் 29 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் இதுவரை 4,250 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. மேலும் நடக்க உள்ள நடவுப் பணிகளுக்காக 190 ஹெக்டேரில் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளது. தற்போது குறுவை நடைபெறாத இடங்களில் கரும்பு, பருத்தி, உளுந்து, பச்சை பயறு போன்ற பயர் வகை தானியங்கள் உற்பத்தியை விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர் என்றார்.

முன்னதாக, பாபநாசம் வட்டம், ரகுநாதபுரம் ஊராட்சியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லும் குழாய் வழங்கும் திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடிக்கு தெளிப்பு நீர் பாசனம், உமையாள்புரம் ஊராட்சியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூலம் சுமார் 100 ஹெக்டேரில் 100 விவசாயிகள் சேர்ந்து உளுந்து சாகுபடி செய்துள்ளதையும், கும்பகோணம் வட்டம் கருவளர்சேரியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடி செய்யப்படுவதையும் ஆட்சியர் பார்வையிட்டு, விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து சாக்கோட்டை பசுந்தாள் உரப்பயிர் தக்கை பூண்டு விதை உற்பத்தி செய்யப்படுவதையும், ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டார்.

ஆய்வின்போது கும்பகோணம் உதவி ஆட்சியர் மந்திரி கோவிந்தராவ், வேளாண்மை துறை இணை இயக்குநர் (பொ) ராமதாஸ், துணை இயக்குனர் சி.சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்ட இளம் விஞ்ஞானிகள்

**தூத்துக்குடி**,

தூத்துக்குடியில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை இளம் விஞ்ஞானிகள் திட்டத்தில் பயிற்சி பெறும் 40 மாணவர், மாணவிகள் வியாழக்கிழமை பார்வையிட்டனர்.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும், தூத்துக்குடி காமராஜ் கல்லூரியும் இணைந்து நடத்தும் இளம் விஞ்ஞானிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவர், மாணவிகளுக்கு கள ஆய்வு அளிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, தூத்துக்குடி கடற்கரை சாலையில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது. முத்துசிப்பி வளர்ப்பு, சங்கு வளர்ப்பு, மீன்பிடி

தொழில்நுட்பத்தின் மேலாண்மை, கூண்டு வளர்ப்பு முறை ஆகியவை குறித்து விஞ்ஞானி ஜெகதீஷ் பயிற்சி அளித்தார்.

உயிரியல் வல்லுநர்களின் சொர்க்கம் என அழைக்கப்படும் மன்னார் வளைகுடா கடல் பகுதியின் முக்கியத்துவம் மற்றும் அதனை பாதுகாப்பதில் மாணவர், மாணவிகள் பங்கு குறித்து பயிற்சி முகாம் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெ. நாகராஜன் விளக்கம் அளித்தார். பயிற்சி முகாமில் பங்கேற்ற 40 மாணவர், மாணவிகள் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மீன்களின் வகைகள், வாழ்க்கை முறை குறித்து பார்வையிட்டு அறிந்தனர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி உதவிப் பேராசிரியர் ஆ. தேவராஜ் மற்றும் விலங்கியல் துறையினர் செய்திருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

142 அடிக்கு பெரியாறு அணையில் நீரை தேக்க பணிகள் மும்முரம்



**கூடலுார்**:உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, முல்லைப் பெரியாறு அணையில், 142 அடி உயரத்திற்கு தண்ணீர் தேக்கும் வகையில், அளவுகள் குறிக்கும் பணி, மும்முரமாக நடந்து வருகிறது.முல்லைப் பெரியாறு அணையில், நீர்மட்டம் உயர்த்துவது தொடர்பான பிரச்னையில், 2006 பிப்., 27ல், அணையின் நீர்மட்டத்தை, 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

வழங்கியது. ஆனால், அந்த தீர்ப்பை அமல்படுத்த விடாமல், கேரள அரசு, பல்வேறு முட்டுக்கட்டைகள் போட்டு வந்தது.

இதையடுத்து, மீண்டும், தமிழக அரசு சார்பில், வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு விசாரணை முடிவில், கடந்த, 7ம் தேதி, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதில், அணையின் நீர்மட்டத்தை, 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என, கூறப்பட்டிருந்தது.தற்போது வழங்கப்பட்ட தீர்ப்பை, அமல்படுத்தியே ஆக வேண்டும் என, தமிழக பொதுப்பணித் துறையினர், முன்னேற்பாடு பணிகளை, முழுவீச்சுடன் செய்து வருகின்றனர். அணையை ஒட்டிஉள்ள, 13 ஷட்டர்களில், 'கிரீஸ்' தடவி, சீரமைத்து உள்ளனர். கடந்த, 1979ல், அணையின் நீர்மட்டம், 136 அடியாக நிலை நிறுத்தப்பட்ட பின், ஷட்டரை, அப்படியே விட்டுவிட்டதால், துருப்பிடித்து சேதமடைந்திருந்த, சில பகுதிகளையும் சீரமைத்து வருகின்றனர்.

ஷட்டர்கள் அனைத்தையும் முழுமையாக இறக்கினால், அணையில், 152 அடி நீர்மட்டம் தேங்கும் வகையில் உள்ளதால், 142 அடி நீர்மட்டம் உயர்ந்தவுடன், அதற்கு மேல் உள்ள தண்ணீரை, உடனடியாக, கேரள பகுதிக்கு திறந்து விடும் வகையில், ஷட்டரில், அளவுகள் குறிக்கும் பணி, தற்போது, மும்முரமாக நடந்து வருகிறது.ஒரு சில தினங்களில், நீர்மட்டம், 142 அடியாக உயர்த்துவதற்கான அனைத்து பணிகளும் முடிவடைந்துவிடும். அதன்பின், அரசிடமிருந்து உத்தரவு வந்த பின், நீர்மட்டத்தை, 142 அடியாக உயர்த்த, ஷட்டர்கள் இறக்கப்படும் என, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வெப்பச்சலனம் தருகிறது மழை; அனல் தாக்கமும் தொடர்கிறது



**சென்னை**:"வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், வலுவிழந்து திசை மாறுகிறது. இருப்பினும், வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தில் மழை நீடிக்கும்," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் தெரிவித்தார்.

வானிலை ஆய்வு மையம்இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:கடந்த, இரு தினங்களாக, மத்திய கிழக்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று காலை நிலவரப்படி, மியான்மர் நாட்டின், யாங்கோனுக்கு, மேற்கு தென் மேற்கில், 440 கி.மீ., தொலைவிலும், வங்கதேச நாட்டின், காக்ஸ்பஜாருக்கு, தெற்கே, 530 கி.மீ., தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.இது மேலும், வலு குன்றி, வட கிழக்கு நோக்கி நகர்ந்து, திசை மாறும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில், வெப்பச்சலனம் காரணமாக, கடந்த, 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில், 13 செ.மீ., மழை பதிவாகியது. அடுத்த, 24 மணி நேரத்தில், வட மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், இடி, மின்னலுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம்.இவ்வாறு அவர் கூறினார்.வெப்பநிலையை பொறுத்த வரை, நேற்று சென்னையில் அதிகபட்சமாக, 40 டிகிரி செல்சியஸ் - 104 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவாகியதாகக் கூறப்படுகிறது. இதனால், அனல் அதிகமாக இருந்தது.மேலும், திருச்சி, வேலூார், சேலம், மதுரை, திருப்பத்துார் பகுதிகளிலும் வெயில் அதிகரித்து இருந்தது.

பொதுவாக, வெப்பச்சலனம் என்பது, தரைப்பகுதியில் நிகழ்வது. இதன் காரணமாக, ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது. வெப்பச்சலனமானது, அதிக வெப்பம், காற்றிலுள்ள ஈரப்பதம் மற்றும் உறுதிஅற்ற வானிலை ஆகியவற்றின் கூட்டணியில் நிகழ்வதாகும்.

எதிர்திசை காற்று:தரைப்பகுதியில் காற்றின் திசை மாறுவதாலும் அதிக மழைப் பொழிவு கிடைக்கிறது. காற்று அடுக்குகளில், ஒரு அடுக்கில் உள்ள காற்று, எதிர்திசை காற்றுடன் மோதும் போது, மழை அதிகம் பெய்யாது.அதே நேரம், எதிர் காற்றானது, திசை மாறி பயணிக்கும் போது, அதிகளவில் மழைப் பொழிவு கிடைக்கிறது.

## வேளாண்மை மையங்களில் ஆன்லைன்'பில்லிங்' திட்டம்: ஜுன்1 ல் அமல்

**திண்டுக்கல்**:வேளாண்மை விரிவாக்க மையங்களில், லோக்சபா தேர்தலால் தள்ளி போன, ஆன்லைன் 'பில்லிங்' திட்டம், ஜுன்1 முதல் செயல்பாட்டிற்கு வர உள்ளது. தமிழகத்தில் 82 லட்சம் விவசாய பண்ணை குடும்பங்கள் உள்ளன.ஒரே பயிர் சாகுபடி, அதிகபடியான ரசாயன உரம் பயன்படுத்துதல் போன்றவற்றால், 1.26 சதவீதமாக இருந்த மண்ணின் அங்கக சத்து, 0.68 சதவீதமாக குறைந்துள்ளது.இவற்றை தடுக்க, மண் மாதிரிகளை ஆய்வுசெய்து, விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்கப்பட்டன.

மேலும், அதன் விபரங்கள் அனைத்தும் இன்டர்நெட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் அடிப்படையில், வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் இடுபொருட்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.மேலும், மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருட்களான விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு, ஆன்லைன் 'பில்லிங்' மூலம் ரசீது வழங்கப்பட உள்ளது. ரசீதுகளை 'பிரின்ட்' எடுத்து உடனுக்குடன் தருவதால், முறைகேடுகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.இடுபொருட்கள் இருப்பு விபரம், பற்றாக்குறை போன்ற விபரங்களை சென்னையில் இருந்தபடியே வேளாண்மை அதிகாரிகள் தெரிந்துகொள்ள முடியும். மேலும், தேவைக்கு தகுந்தாற்போல், இடுபொருட்களை அனுப்பி வைக்க முடியும். கடந்த மார்ச் 1 ல் செயல்படுத்த இருந்த இந்த திட்டம், லோக்சபா தேர்தலால் தள்ளிப்போனது. இந்நிலையில், ஜுன்1 முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

## விசைப்படகுகளுக்கு புது டீசல் மானிய புத்தகம்:ராமேஸ்வரத்தில் மீன்துறை அதிகாரிகள்ஆய்வு

**ராமேஸ்வரம்**:ராமேஸ்வரத்தில் விசைப்படகுகளுக்கு, புதிய டீசல் மானிய புத்தகம் வழங்குவதற்கு முன், மீன்துறை அதிகாரிகள், படகுகளை ஆய்வு செய்தனர்.

ராமேஸ்வரம், பாம்பனில் 1,050 விசைப்படகுகள் உள்ளன. ஒரு படகிற்கு மாதம் 1,500 வீதம், ஒரு ஆண்டிற்கு 15 ஆயிரம் லிட்டர் டீசல் மானிய விலையில், தமிழக அரசு வழங்குகிறது. இதற்காக, ஆண்டுதோறும் மே மாதம் இறுதியில், படகின் நீளம், அகலம், இன்ஜின் குதிரைசக்தி திறன் ஆகியவை குறித்தும், மீன்துறை

விதிகளுக்கு உட்பட்டு படகுகள் உள்ளனவா என, மீன்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, புதிய டீசல் மானிய புத்தகம் வழங்குவர்.

மேலும், இந்த ஆய்வின் மூலம் படகு இன்றி, போலியாக டீசல் மானிய புத்தகம் வைத்திருப்பதை தடுக்க முடியும். அதன்படி நேற்று, ராமேஸ்வரம் மீன்துறை அதிகாரிகள், ராமேஸ்வரம் வேர்கோடு, கடற்கரை, மீன்களை இறக்கும் 'ஜெட்டி' பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த விசைப்படகுகளின் நீளம், அகலத்தை அளவிட்டு, இயந்திரங்களை ஆய்வு செய்தனர்.'இந்த ஆய்வு இரண்டு நாட்கள் நடப்பதால், படகு உரிமையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஆய்வுக்கு பின், ஜூன்
முதல் வாரத்தில் புதிய டீசல் மானிய புத்தகம் வழங்கப்படும்' என, மீன்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சர்க்கரை உற்பத்திசூடு பிடிக்குமா?**



**புதுடில்லி**:சர்க்கரை உற்பத்தி, மந்தகதியில் உள்ளதால், நடப்பு பருவத்தில், எதிர்-பார்த்த அளவு எட்டப்படுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.நடப்பு 2013 – 14ம் பருவத்தில் (அக்., – செப்.,) மே 15ம் தேதி வரையிலுமாக, நாட்டின் சர்க்கரை உற்-பத்தி, 3.23 சதவீதம் சரிவடைந்து, 2.39 கோடி டன்னாகக் குறைந்துள்ளது. முந்தைய பருவத்தின் இதே காலத்தில், சர்க்கரை உற்பத்தி, 2.47 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது. மதிப்பீட்டு காலத்தில், மகாராஷ்டிரா, 77 லட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்து, முதலிடத்தில் உள்ளது.இதையடுத்து, உத்தர பிர-தேசம் (64.50 லட்சம் டன்), கர்நாடகா (41 லட்சம் டன்), தமிழகம் (11.50 லட்சம்

டன்) உள்ளிட்ட மாநிலங்கள் உள்ளன.நடப்பு பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்-பத்தி, 2.42 கோடி டன்னாக இருக்கும் என, ‘இஸ்மா’ மதிப்பீடு செய்துள்-ளது.எனினும், இது, கடந்த பருவ உற்பத்தியுடன் (2.51 கோடி டன்) ஒப்பிடு-கையில், 4 சதவீதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

**இன்று துவங்குகிறது மலர் கண்காட்சி:சுற்றுலா பயணிகளால் களைகட்டியது ஊட்டி**



**ஊட்டி**:ஊட்டியில், மலர் கண்காட்சி இன்று துவங்குகிறது. இக்கண்காட்சியை கண்டு ரசிக்க, பல ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் முகாமிட்டுள்ளனர். இதனால், கோடை சீசன் களைகட்டியுள்ளது.நீலகிரி மாவட்டம், ஊட்டி தாவரவியல் பூங்காவில், 118ம் ஆண்டு மலர் கண்காட்சி, இன்று துவங்கி, 25ம் தேதி வரை நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகள், மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத் துறை சார்பில் செய்யப்பட்டுள்ளன. கண்காட்சியில், இரண்டு லட்சம் மலர்ச்செடிகள், சுற்றுலா பயணிகளை ஈர்க்க தயாராக உள்ளன.தவிர, 15 ஆயிரம் தொட்டிகளில் துலிப், லில்லியம் உட்பட பல வகை மலர்களும் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன.

தோட்டக்கலைத் துறை சார்பில், கடந்தாண்டில் நடந்த மலர் கண்காட்சிஅன்று, லட்சம் மலர்களைக் கொண்டு, தலைமைச் செயலகத்தின் தோற்றம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு, பார்லிமென்ட் வளாக தோற்றத்தை மலர்களால் அலங்கரிக்க, இரு மாதங்களுக்கு முன் திட்டமிடப்பட்டது.

லோக்சபா தேர்தல் காரணமாக, இத்திட்டம் கைவிடப்பட்டது.தற்போது, 60 அடி நீளம், 10 அகலத்தில், ஒரு லட்சம் ரோஜா மலர்களைக் கொண்டு, மோனோ

ரயிலின் தோற்றம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. மேலும், 60 ஆயிரம் ரோஜா மற்றும் பிற மலர்களைக் கொண்டு, நீலகிரி பழங்குடி மக்களான தோடரின மக்களின் வீடு, வளர்க்கும் கால்நடைகள் போன்ற வற்றை தோட்டக்கலைத் துறையினர் காட்சிப்படுத்தியுள்ளனர்.மின் வாரியத்தின் சார்பில், காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் மாதிரி தோற்றம் தத்ரூபமாக அமைக்கப்பட்டு உள்ளது. கண்காட்சியை, இன்று காலை, 9:00 மணிக்கு, தமிழக வேளாண் துறை அமைச்சர், அக்ரி கிருஷ்ணமூர்த்தி துவக்கி வைக்கிறார்.

## கால்நடை படிப்பில் சேர வாய்ப்பு

**மதுரை**:மதுரை திருப்பரங்குன்றத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் உள்ளது. இங்கு ஐந்தாண்டு கால்நடை மருத்துவ படிப்பு, 4 ஆண்டு பி.டெக்., உணவு தொழில்நுட்பம், கோழியின உற்பத்தி தொழில்நுட்பம் படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வினியோகிக்கப்படுகின்றன.மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மே 30 வரை பெறலாம். பிற்பட்ட வகுப்பினர் 65 சதவீத மதிப்பெண்களும், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 60 சதவீத மதிப்பெண்களும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்ச்சி பெற்றும் இருக்க வேண்டும். விபரங்களுக்கு, 94435 57579ல் தொடர்பு கொள்ளலாம், என, மையத்தின் தலைவர் பண்ணை முருகானந்தன் தெரிவித்தார்.

## 10 கால்நடை மருந்தக கட்டடம் ரூ.2.10 கோடி நிதி ஒதுக்கீடு

**காஞ்சிபுரம்** : மாவட்டத்தில், பத்து கால்நடை மருந்தகங்கள் கட்ட, 2.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், 88 கால்நடை மருத்துவமனைகள் அமைந்துள்ளன. இதில், 20 மருத்துவமனைகளில், மருந்தக பிரிவுக்கு தனி கட்டடம் இல்லை.

இதனால், இந்த மருத்துவமனைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுஉள்ளது. மேலும், மருந்துகளை இருப்பு வைக்கவும் முடியவில்லை.

இந்த மருத்துவமனைகளில், மருந்தகங்களுக்கு தனியாக கட்டடங்கள் கட்ட வேண்டும் என, தமிழக அரசுக்கு, மாவட்ட கால்நடைத் துறை, கடந்த ஆண்டு

பரிந்துரை செய்தது. இதை தொடர்ந்து, முதற்கட்டமாக, 10 கால்நடை மருத்துவமனைகளில், மருந்தகங்களுக்கு தனி கட்டடங்கள் கட்ட 2.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் கட்டும் பணி, பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட பொதுப் பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: குன்றத்துார், தம்மனுார், சோத்துப்பாக்கம், கூரம், தேவேரியம்பாக்கம், நெய்யாடிவாக்கம், வள்ளி புரம், கெண்டிராச்சேரி, இராமபுரம், கேளம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில், தலா 21 லட்சம் ரூபாய் செலவில்.

## மூங்கில்துறைப்பட்டு பகுதியில் எள் அதிக விளைச்சலால் மகிழ்ச்சி

**மூங்கில்துறைப்பட்டு**: மூங்கில்துறைப்பட்டு பகுதியில் எள் அமோக விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மூங்கில்துறைப்பட்டு பகுதியில் மழை பொய்த்ததால் கிணற்று நீரை கொண்டு விவசாயம் செய்து வந்தனர்.

நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் விவச ாயம் செய்ய முடியவில்லை.

கிணற்றில் இருக்கும் சிறிதளவு நீரை கொண்டு மானாவரி பயிரான எள் பயிர் செய்தனர்.

மூங்கில்துறைப்பட்டு, ராவுத்தநல்லூர், மணலூர், வடபொன்பரப்பி, ரங்கப்பனூர், பொரசப்பட்டு, புளியங்கோட்டை, பாக்கம், கடுவனூர், ஈருடையம்பட்டு, மங்களம், அரும்பராம்பட்டு, சுத்தமலை, ஆர்க்கவாடி போன்ற கிராமங்களில் எள் அமோக விளைச்சலால் நல்ல விலைக்கு விற்பனை செய்வதால் அதிக லாபம் ஈட்டலாம் என்ற எண்ணத்தில் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

இப்பகுதியில் தண்ணீர் இல்லாமல் பல விவசாய நிலங்கள் வறண்டுள்ளன. இதனால் விவசாயிகள் விவசாயம் செய்யாமல் வெளி மாநிலத்திற்கு கூலி வேலைக்கு செல்லும் நிலை உள்ளது.

சில விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருகின்றன.

தற்போது எள் விளைச்சல் நன்றாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## ரூ.20 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**நாமக்கல்**: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 20 லட்சம் ரூபாய்க்கு, பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்க குடோனில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,200 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். சுரபி ரகம் அதிகபட்சமாக, 5,589 ரூபாய், குறைந்தபட்சமாக, 5,459 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,316 ரூபாய், குறைந்த பட்சமாக, 4,919 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று, 20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்துச் சென்றனர்.

## மழையால் வரத்து குறைவு பீன்ஸ் விலை அதிகரிப்பு

**ஈரோடு**:அதிக மழையால் வரத்து குறைந்து, பீன்ஸ் விலை அதிகரித்துள்ளது.

பெங்களூரு, ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பீன்ஸ், கேரட் உள்ளிட்ட காய்கறி வகைகளும், சத்தியமங்கலம், தாளவாடியில் இருந்து தக்காளி, பீன்ஸ் போன்றவை, ஈரோடு காய்கறி மார்க்கெட்டுக்கு, தினமும் லாரிகள் மூலம் வரத்தாகிறது.

பெங்களூரு, தாளவாடி பகுதிகளில் பெய்த கனமழையால், பீன்ஸ் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கு மட்டும், தினமும், ஒரு டன் பீன்ஸ் வரத்தாகும். தற்போது ஊட்டியில் இருந்து மட்டுமே, பீன்ஸ் வருகிறது. மழை காரணமாக, வரத்து குறைந்தும், ஈரோடு கொண்டு வருவதற்குள் அழுகியும் விடுகின்றன. எனவே, குறைந்தளவே பீன்ஸ், விற்பனைக்கு வருவதால், கடந்த வாரம், கிலோ, 50 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ், தற்போது, 60 ரூபாயாக உயர்ந்துள்ளது. இன்னும், ஒரு மாதத்துக்கு, இதே விலையே தொடரும். அதன் பின், வர த்து அதிகரித்து விலை குறைய கூடும், என்று, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## கொப்பரை விலை உயர வாய்ப்பு தேங்காய் விலை 'கிடுகிடு'

பொள்ளாச்சி : காங்கேயம் மார்க்கெட் நிலவரப்படி, முதல்தர கொப்பரை ரூ. 107க்கு சென்றது. வரத்து குறைந்ததால், விலை மேலும் உயரக்கூடிய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், மற்ற சாகுபடிகளை விட தென்னை அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், சாகுபடி செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. கொப்பரை தேங்காய் தரம் பிரிக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தேங்காய்க்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக தவித்து வருகின்றனர். இந்நிலையில், கடும் வறட்சியால், தென்னை மரங்கள் நீரின்றி வாடியது. மரங்களும் வாடியதால், மார்க்கெட்டிற்கு தேங்காய் வரத்தும் முற்றிலும் குறைந்துள்ளது. தேங்காய் கிடைக்காததால், அதன் விலையும் கிடு..கிடு..வென உயர்ந்து வருகிறது.

விலை உயர்வு:

பொள்ளாச்சி பகுதியில், தேங்காய் வரத்து குறைந்து வருவதால், அதன் விலையும் சில மாதங்களாக உயர்ந்து வருகிறது. நேற்றைய காங்கேயம் மார்க்கெட் நிலவரப்படி, முதல் தர கொப்பரை 107 ரூபாயும்; இரண்டாம் தர கொப்பரை 105 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. முதல் தர தேங்காய் ஒரு டன் 32,000 ரூபாயும், இரண்டாம் தர தேங்காய் 29,000 ரூபாய்க்கு சென்றது. ஒரு கிலோ தேங்காய் பவுடர் 145 ரூபாய்க்கும்; ஒரு டின் எண்ணெய் 1,280 ரூபாய்க்கும் சென்றது. விவசாயிகள் கூறுகையில்,' வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களில், காய்ப்புத்திறன் முற்றிலுமாக குறைந்துள்ளது. கேரளா, கர்நாடகா மாநிலங்களிலிருந்தும் தேங்காய் வரத்து மிகவும் குறைந்து காணப்படுகிறது. இதனால், மார்க்கெட்டில், தேங்காய் விலை உயர்ந்து வருவது மகிழ்ச்சியாக உள்ளது. வரத்து குறைந்து வருவதால், மேலும், விலை உயரக்கூடிய வாய்ப்புள்ளது,' என்றனர்.

## விதை வாங்குவதில் எச்சரிக்கை தேவை! விவசாயிகளுக்கு அதிகாரி அறிவுரை

**உடுமலை** : 'தனி நபர்கள் விற்பனை செய்யும் விதைகளை வாங்கி, விவசாயிகள் ஏமாற வேண்டாம்,' என, விதைத்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

உடுமலை விதை ஆய்வாளர் நிர்மலா வெளியிட்ட அறிக்கை:

உடுமலை, பொள்ளாச்சி, மடத்துக்குளம், குடிமங்கலம் சுற்றுப்பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த சில நாட்களுக்குமுன், இப்பகுதிகளில் பெய்த பரவலான மழையை நம்பி, விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், விவசாயிகள் தரமான விதைகள், இடுபொருட்களை தேர்ந்தெடுப்பது அவசியம். இதில் சிறிது கவனக்குறைவு ஏற்பட்டாலும், மகசூலில் பெரிய இழப்பு ஏற்பட்டு விடும்.

விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதை வாங்கும்போது, விதை விற்பனையாளர், கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தில் விற்பனை உரிமம் பெற்றுள்ளாரா என்பதை கேட்டறிந்து, விதைகளை வாங்க வேண்டும். விற்பனை பட்டியலையும் கேட்டு வாங்குவது அவசியம். காலாவதியான விதைகளை வாங்கக் கூடாது.

விற்பனை பட்டியலில் குவியல் எண், விதை அளவு, விற்பனையாளர் கையொப்பம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விதை விற்பனையாளர்கள் தங்கள் கடைகளில் உரிமம் நன்கு தெரியும்படி கண்ணாடி சட்டமிட்டு மாட்டியிருக்க வேண்டும். விதைகளை மருந்து மற்றும் உரங்களுடன் கலக்காமல் தனியாக துாய்மையான முறையில் பராமரிக்க வேண்டும்.

இவற்றை முறையாக கடைபிடிக்கும் விதை விற்பனையாளர்களிடம் மட்டுமே விவசாயிகள் விதைகள், இடுபொருட்களை வாங்குவது நல்லது.உரிமம் இன்றி தனி நபர்கள் விற்கும் விதைகளை வாங்க வேண்டாம். மேலும், விற்பனை உரிமம் இன்றி, விதை, இடுபொருட்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>கனமழை; உழவுப்பணி துவக்கம்</u>

**திருப்பூர்** : திருப்பூர் மற்றும் அவிநாசி சுற்றுவட்டார பகுதிகளில், கன மழை பெய்தது. விவசாயிகள், உழவுப்பணியை துவக்கியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி நீடித்து வந்த நிலையில், கடந்த சில நாட்களாக, மாவட்டம் முழுவதும் கோடை மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, திருப்பூரில் 6 மி.மீ., காங்கயத்தில் 8.2; பல்லடத்தில் 14; உடுமலையில்

2 மி.மீ., மழை பெய்திருந்தது. நேற்று முன்தினம் மாலை, திருப்பூர், அவிநாசி பகுதிகளில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. மரங்கள் வேருடன் சாய்ந்தன; வீட்டின் கூரைகள் காற்றுக்கு பறந்தன. ரோடுகளில், மழை நீருடன் கழிவு நீரும் சேர்ந்து ஓடியதோடு, சில பகுதிகளில் வீட்டுக்குள் தண்ணீர் புகுந்தது.

திருப்பூரில், 33 மி.மீ., பதிவாகியிருந்தது. கடந்த ஐந்து மாதங்களில் பெய்த மழை அளவில் இது கூடுதல். அவிநாசியில் 26.5 மீ.மீ., பல்லடத்தில் 2.5 மி.மீ., பதிவாகியிருந்தது; மற்ற பகுதிகளில் மழை பதிவாகவில்லை.

அவிநாசி: அவிநாசி வட்டாரத்தில் தண்டுக்காரன்பாளையம், சேவூர், கானூர், ஆலத்தூர், தெக்கலூர், புதுப்பாளையம், ராக்கியாபாளையம் ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களிலும், கடந்த சில தினங்களாக நல்ல மழை பெய்தது. இம்மழை 25.6 மி.மீட்டராக பதிவானது. மழையுடன் வீசிய பலத்த காற்றுக்கு பல இடங்களில், மரங்கள் சாய்ந்தன. வேலாயுதம்பாளையம் ஊராட்சி, கொடி காத்த குமரன் நகரில், மரங்கள் சாய்ந்ததில், மூன்று மின் கம்பங்கள் முறிந்தன. இதனால், அப்பகுதியில், மின்தடை ஏற்பட்டு, நேற்று மாலை சீரமைக்கப் பட்டது.

ராக்கியாபாளையம், தேவராயன்பாளையம், மங்கலம் ரோடு, திருப்பூர் ரோடு உள்ளிட்ட பல இடங்களில், மரங்கள் முறிந்து விழுந்தன. 50க்கும் மேற்பட்ட வீடுகளில் ஓடுகள் பறந்தன.

தொடர் மழை காரணமாக, அவிநாசி ஒன்றியத்துக்கு உட்பட்ட கானூர், தண்டுக்காரன்பாளையம், ஆலத்தூர் வட்டார கிராமங்களில், உழவுப்பணிகளை விவசாயிகள் துவக்கிஉள்ளனர். அவர்கள் கூறுகையில், "அக்னி நட்சத்திரம் கொளுத்தும் நாட்களிலும் மழை வருவது மகிழ்ச்சியாக உள்ளது. இம்மழை மானாவாரி பயிர் ரகங்களுக்கு ஏற்பட்டது.

இன்னும் சில வாரங்களில் பருவ மழை துவங்க உள்ளதால், இப்போது பெய்த மழைக்கு, பருத்தி, கரும்பு, மஞ்சள் ஆகியவற்றை விதைக்க திட்டமிட்டுள்ளோம். மழை தொடர்ந்து பெய்தால், விவசாயத்துக்கு ஏற்றதாக இருக்கும்,' என்றனர்.

## ரெட்டியார்சத்திரம் பகுதியில் கோடை உழவு பணி துவக்கம்

**ரெட்டியார்சத்திரம்** : மழையின்மையால் கால்நடைகள் விற்பனையான சூழலில், சமீபத்திய கோடைமழைக்கான உழவுப்பணியில் இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. பருவமழை பொய்த்த நிலையில், பரவலாக நிலத்தடி நீர்மட்டம்

குறைந்துள்ளது. விவசாய பணிகள் கடுமையாக பாதிப்படைந்தது. தண்ணீர் பிரச்னை, தீவன உற்பத்தி பாதிப்பு போன்றவற்றால், கிராமங்களில் பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்பு தொழிலை கைவிட்டுள்ளனர். சொற்ப எண்ணிக்கையில் பராமரிக்கப்பட்டு வந்த மாடுகளும், சில வாரங்களுக்கு முன் அடிமாடுகளாக விற்பனையாகின.

இரு வாரங்களாக, ரெட்டியார்சத்திரம் பகுதியில் அவ்வப்போது, கோடைமழை பெய்து வருகிறது.

இருப்பினும், நிலத்தடி நீர்மட்டத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கன்னிவாடி, தோணிமலையில் சாரல் மழை நீடித்தபோதும், நாயோடை நீர்தேக்கத்திற்கு வரத்து இல்லாததால் வறண்டுள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் பலர் கோடை சாகுபடிக்கான பணிகளுக்கு ஆயத்தமாகி வருகின்றனர். முதற்கட்டமாக, ரெட்டியார்சத்திரம், கொத்தப்புள்ளி, பலக்கனூத்து, நீலமலைக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில், கோடை உழவுப்பணிகள் மும்முரமாக நடக்கிறது. கால்நடைகள் விற்பனையானதால், உழவுப்பணியில் இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

## முந்திரி, திராட்சை சாகுபடி விவசாயிகளுக்கு மானியம்

தேனி: முந்திரி, திராட்சை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, அரசு மானிய உதவிகளை வழங்குகிறது. முந்திரி பழைய தோட்டங்களை புதுப்பிக்கும் திட்டத்தில், 15 முதல் 20 ஆண்டுகள் ஆன முந்திரி தோட்டத்தில், கன்றுகள் காய்ந்திருந்தால், பழைய மரங்களை அகற்றுவதற்கும், அந்த இடைவெளியில் புதுக்கன்றுகள் நடுவதற்கும்,தேவையான நீரில் கரையும் உரங்கள் பயிர் பாதுகாப்பு மருந்துகள்,தோட்டக்கலைத்துறை சார்பில் மானியமாக வழங்கப்படுகிறது. இடை உழவு செலவுக்கும், பணம் வழங்கப்படும். திராட்சை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தங்களது திராட்சை கொடியில் உள்ள பழங்களை பறவைகள், வவ்வால்கள் சேதப்படுத்துவதை தடுக்க, பறவை தடுப்பு வலைகள் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.இத்திட்டத்தில், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1.25 ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் மானியம்,தோட்டக்கலைத்துறை சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாத இறுதியில் மஞ்சள் ரூ.7500ஐ தாண்டும் வேளாண் பல்கலை கணிப்பு



**திருச்சி:** இந்தியாவில், ஓராண்டுக்கான மஞ்சள் தேவை 75 லட்சம் (ஒரு மூட்டை 75 கிலோ) மூட்டைகளாகும். மஞ்சள் ஜூன் - ஜூலையில் பயிரிடப்பட்டு, மார்ச்-ஏப்ரலில் அறுவடை செய்யப்படும். கடந்த 2013ல் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.6,500 முதல் 7,000 வரை விலை போனது. பின்னர் அந்த ஆண்டு மத்தியில் ரூ.5,800க்கும் விற்றது. வருட இறுதியில் இந்த விலை சிறிது உயர்ந்தது. இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்தே மஞ்சள் விலை ஏறுமுகத்தில் இருந்தது. தரமான மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.6,700 வரை விற்கிறது. இந்நிலையில், விவசாயிகளுக்கு, வழிகாட்டும் விதமாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 25 வருடமாக நிலவிய மஞ்சள் விலையை ஆய்வு செய்தது. அதன்படி, இந்திய மஞ்சள் உற்பத்தி 2014ல் 35 முதல் 40 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என அறியப்படுகிறது. இதில் ஆந்திரா 20 லட்சம் மூட்டைகளும், தமிழகம் 7 லட்சம் மூட்டைகளும் மற்றும் மகராஷ்டிரா 10 லட்சம் மூட்டைகளும் பங்களிக்கும். தேசிய அளவில் தோராயமாக 35 லட்சம் மூட்டை மஞ்சள் கையிருப்பில் இருக்கும் என்றும் தெரிய வருகிறது.

இது குறித்து திருச்சி வேளாண் சந்தை நுண்ணறிவுவணிக மேம்பாட்டு மைய துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், 'தேசிய அளவில் அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் எதிர்பார்க்கப்படும் குறைந்த உற்பத்தி, எதிர் வரும் மாதங்களில் மஞ்சளுக்கான தேவை மற்றும் முக்கிய உற்பத்தி மையங்களில் உள்ள குறைந்த இருப்பு ஆகியவை மஞ்சள் விலையை ஏறுமுகத்தில் வைக்கும். இதனால் மஞ்சள் விலை இந்த மாத இறுதியில் குவிண்டால் ரூ.7,500ஐ தாண்டும்' என்றார்.

**கோடை வெயிலால் கறிக்கோழி விலை வீழ்ச்சி கிலோ ரூ.130க்கு விற்பனை**



**கோவை:** கறிக்கோழி விலை கடந்த சில தினங்களாக தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. நேற்று ஒரே நாளில் மொத்த விலையில் கிலோவுக்கு யி8 குறைந்துள்ளது. சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி கிலோவுக்கு ரூ.15 குறைந்து, ரூ.130க்கு விற்கப்படுகிறது. கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் கேரளாவிற்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் கறிக்கோழி விலையை தினசரி நிர்ணயித்து வருகின்றனர். அதன்படி பண்ணை மொத்த கொள்முதல் விலை, சில்லரை விற்பனையில் உயிருடன் சில்லரை விலை, தோலுடன் கறி விலை, தோல் நீக்கிய கறி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகின்றனர். கறிக்கோழி கடந்த 11ம் தேதி மொத்த கொள்முதல் விலை கிலோ ரூ.81 ஆகவும் சில்லரை விற்பனையில் உயிருடன் கோழி கிலோ ரூ.105 ஆகவும், தோலுடன் கறி ரூ.150 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.160ஆகவும் நிர்ணயித்தனர். பின்னர் கோடை வெயில் காரணமாக கறிக்கோழி நுகர்வு குறையத் தொடங்கியது.

இதனால் கறிக்கோழி விலை மீண்டும் சரிய துவங்கியது. கடந்த 15ம் தேதி மொத்த கொள்முதல் விலை ரூ.79 ஆகவும், உயிருடன் கோழி ரூ.100 ஆகவும், தோலுடன் கறி ரூ.145 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.155 ஆகவும் குறைந்தது. 18ம் தேதி கறிக்கோழி விலை மேலும் சரிந்து மொத்த கொள்முதல் விலை கிலோ யி75 ஆகவும், சில்லரை விலையில் தோலுடன் கறி கிலோ யி140 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.150 ஆகவும் சரிந்தது. நேற்று முன்தினம் (20ம் தேதி) மேலும் சரிந்து மொத்த கொள்முதல் விலை கிலோ ரூ.73 ஆகவும், சில்லரையில் தோலுடன் கறி ரூ.135 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.145 ஆகவும் சரிந்தது. நேற்று (22ம் தேதி) மொத்த கொள்முதல் விலை கிலோ யி65க்கும், சில்லரையில் தோலுடன் கறி ரூ.120க்கும், தோல் நீக்கிய கறி ரூ.130க்கும் சரிந்தது.

கறிக்கோழி விலை கடந்த 10 நாட்களாக சரிந்து வருகிறது. இதில் நேற்று ஒரே நாளில் மொத்த கொள்முதல் விலையில் கிலோவுக்கு ரூ.8 குறைந்துள்ளது. சில்லரை விலையில் தோல் நீக்கிய கறி கிலோவுக்கு ரூ.15 குறைந்தது. கறிக்கோழி நுகர்வு குறைந்ததால், விலையை குறைக்க வேண்டிய நிலை உருவானதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**கத்தரிக்காய் கிலோ ரூ.100 விற்பனை**



**களக்காடு**: திருமண நிகழ்ச்சிகள் மற்றும் வரத்து குறைவால் எப்போதும் இல்லாத அளவிற்கு கத்தரிக்காய் விலை ரூ.100ஐ எட்டியுள்ளது. இந்த திடீர் விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். நெல்லை மாவட்டம், களக்காட்டில் கடந்த வாரம் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையானது. இந்நிலையில் வைகாசி, மற்றும் ஆனி மாதங்களில் திருமண

சீசன் என்பதாலும் வரத்து குறைவாலும் கத்தரிக்காய் விலை படிப்படியாக உயர்ந்து கிலோ ரூ.65 முதல் 75 வரை விற்கப்பட்டது. வரும் 25, 26 ஆகிய தேதிகளில் முகூர்த்தம் அதிக இருக்கும் என்பதால் நேற்று ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.100க்கு விற்கப்பட்டது. இதேபோல் மற்ற காய்கறிகளின் விலையும் அதிரடியாக உயர்ந்துள்ளது.

அவரைக்காய் ஒரு கிலோ ரூ.90க்கும், மிளகாய் கிலோ ரூ.40க்கும், தக்காளி கிலோ ரூ.25க்கும், உருளை கிலோ ரூ.35க்கும், சேனை ரூ.40க்கும் கேரட் ரூ.50க்கும், புடலை ரூ.40க்கும், கருணை ரூ.90க்கும், சவ்சவ்- ரூ.45க்கும், சாதா பீன்ஸ்- ரூ.60க்கும், முருங்கை பீன்ஸ்- ரூ.70க்கும், இஞ்சி- ரூ.135க்கும், கொத்தமல்லி- ரூ.60க்கும், புதினா- ரூ.50க்கும், சோயாபீன்ஸ்- ரூ.130க்கும், தேங்காய் ஒன்று ரூ.35க்கும் விற்பனையானது. இந்த விலை உயர்வை அறிந்து, பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

**<u>வருகிற 30ல் தடைகாலம் முடிகிறது விசைப்படகுகளில் அதிகாரிகள் ஆய்வு</u>**



**ராமேஸ்வரம்:** தடைகாலம் முடிந்து கடலுக்கு செல்ல இன்னும் 7 நாட்களே உள்ள நிலையில் ராமேஸ்வரம் கடல் பகுதியில் விசைப்படகுகளை மீன்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். தமிழக கடல் பகுதியில் ஏப். 15 துவங்கி 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளது. இந்த தடைக் காலம் முடிந்து வரும் 31ம் தேதி மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்கின்றனர். இதற்கிடையே இக்கடல் பகுதியில் அனுமதிக்கப்பட்ட வேகத்தைவிட அதிக குதிரை சக்தி கொண்ட இயந்திரங்களைப் பயன்படுத்தி விசைப்படகுகளில் மீன்பிடிப்பதாகவும், பதிவு இல்லாத படகுகள் மீன்பிடிக்கச் செல்வதாகவும்

புகார்கள் சென்றன.இதையடுத்து படகுகளை ஆய்வு செய்யும் பணியில் மீன்துறை அதிகாரிகள் நேற்று ஈடுபட்டனர்.

இந்திய&இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தையில் இதுகுறித்து இலங்கை மீனவர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. மேலும், ராமேஸ்வரம் மீன்துறை அலுவலகத்தில் 780 விசைப்படகுகளே முறையாக பதிவு செய்யப்பட்டு பதிவு எண்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், 900க்கும் மேற்பட்ட படகுகள் மீன்பிடிக்கச் செல்கின்றன. மீன்துறையால் ஒரு படகிற்கு வழங்கப்பட்ட பதிவு எண், பதிவு செய்யப்படாத படகுகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் படகுகளே இல்லாமல் மீன்துறையில் பதிவு செய்யப்பட்ட 200 ஆர்சி புத்தகங்களுக்கு கடலுக்கு செல்வது போல் டீசல் டோக்கன் வழங்கப்பட்டு, சட்டத்திற்குப் புறம்பாக அரசின் மானிய டீசல் வாங்குவதும் தொடர்கிறது.ராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குநர் கோபிநாத் தலைமையில் வெளியூர்களில் இருந்து வந்திருந்த மீன்துறை அதிகாரிகள் பலர் படகில் சென்று கடலில் நிறுத்தப்பட்டிருந்த விசைப்படகுகளின் நீளம், அகலம், பதிவு எண் போன்றவற்றை சரிபார்த்து ஆய்வு செய்தனர்.

## திருவண்ணாமலையில் 10 வாரங்களுக்கு பிறகு மீண்டும் மக்கள் குறைதீர்வு கூட்டம் 26ம் தேதி நடக்கிறது

**திருவண்ணாமலை,** : தேர்தல் நடத்தை விதிமுறை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மக்கள் குறைதீர்வு கூட்டம் 10 வாரங்களுக்கு பிறகு திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் வருகிற 26ம் தேதி நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு கடந்த மார்ச் 5ம் தேதி வெளியானது. அதைத்தொடர்ந்து, அன்று முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தது. எனவே, வழக்கமாக நடைபெறும் மக்கள் குறைதீர்வு கூட்டம், மனு நீதி முகாம், விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் மற்றும் மக்கள் நல திட்டங்கள் வழங்குதல் போன்றவை நடைபெறவில்லை.

நாடாளுமன்ற தேர்தல் வாக்குஎண்ணிக்கை முடிந்துவிட்ட நிலையில், கடந்த 19ம் தேதி மாலையுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டது. எனவே, 10 வாரங்களுக்கு பிறகு வருகிற 26ம் தேதி (திங்கட்கிழமை) திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டம் கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது. அதைத்தொடர்ந்து வழக்கம்போல் மனுநீதிநாள் முகாம், விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் போன்றவை நடைபெறும்.

## விதைப்பண்ணைகள் அமைத்த விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்கள்

**சேலம்**, : சேலம் மாவட்டத்தில் விதைப்பண்ணை அமைத்துள்ள விவசாயிகள் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைப் பண்ணைகள் அமைக்க ஏராளமான விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். வீரபாண்டி, இடைப்பாடி மற்றும் சங்ககிரி வட்டாரங்களில் சுரபி, எம்சியு5, எம்சியு5 (விடி) ஆகிய ரகங்களில் விவசாயிகள் பருத்தி விதைப் பண்ணை அமைத்துள்ளனர். இவர்கள் தரமான விதை உற்பத்தி செய்ய நவீன தொழில் நுட்பங்களை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சேலம் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் ராஜதுரை தெரிவித்திருப்பது:

பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகளில் விதைப்பு நாளில் இருந்து 75 மற்றும் 105ம்நாளில் விதைச்சான்று அலுவலர்கள் வயல் ஆய்வு மேற்கொள்வார்கள். அப்போது பயிர்விலகு தூரம், பயிர் பரப்பு, கலவன்நிலை கவனிக்கப்படும். எனவே விதைப் பண்ணை வயல்தரத்தை நன்கு பராமரித்து கலவன் நீக்கி, ஆய்விற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இரண்டாம் ஆய்வில் கலவன்நிலை, மகசூல் காரணிகள் கணக்கிட்டு மகசூல் அளவு கணிக்கப்படும்.

மூன்றாவதாக நடக்கும் அம்பார ஆய்வில் பருத்தியை அளக்கும் விதமாக சதுரமாகவோ, செவ்வகமாகவோ அம்பாரம் இட்டு விதைச்சான்று அலுவலர், பருத்தி இருப்பு கணிக்கும் வகையில் குவியல் வைத்திருக்க வேண்டும். அறுவடை நிலை ஆய்வில் இருந்து 3மாதங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட சுத்தி

நிலையம் கொண்டு சென்று பருத்தியை இருப்பு வைக்க வேண்டும். சுத்தி நிலைய விதைச்சான்று அலுவலர், ஆய்வு பருத்தியை அறவை செய்து, விதைகளை சுத்தம் செய்து, பகுப்பாய்வு மாதிரி எடுத்து அனுப்ப வேண்டும். ஆதார நிலை ஒன்று விதை உற்பத்தி செய்யும் விதைப்பண்ணை விவசாயிகள், இனத்தூய்மை மாதிரியும் எடுத்து அனுப்ப வேண்டும். பகுப்பாய்வு முடிவில் முளைப்பு, தூய்மை, ஈரப்பதம் போன்ற காரணிகளில் தேர்ச்சி பெற்றால், அக்குவியல் விதைகளுக்கு சான்றட்டை பொருத்தும் பணி மேற்கொள்ள வேண்டும்.விதைச்சான்று அலுவலரின் பரிந்துரையின் படி, விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் சான்றட்டை பெற்று, பகுப்பாய்வு நாளில் இருந்து 60 நாட்களுக்குள் சான்று பணியினை முடிக்க வேண்டும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சான்று பெற்ற விதைகளில் இருந்து சாகுபடி செய்யப்படும் பயிர் உரிய முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, வீரியத்தன்மை போன்ற காரணிகளால் மற்ற விதைகளை விட, கூடுதல் மகசூல் கொடுக்கும். மேலும் நல்ல விலைக்கு விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறமுடியும். இவ்வாறு விதைச்சான்று உதவி இயக்குநர் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**நாமக்கல்**, : நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடக்கிறது. இதில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பரமத்திவேலூரில் வெல்லம் விலை உயர்வு

**பரமத்திவேலூர்**, : பரமத்திவேலூரில் வெல்லம் விலை உயர்ந்தது. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா சோழசிராமணி, மாரப்பம்பாளையம், கொத்தமங்கலம், தி.கவுண்டம்பாளையம், சிறுநல்லிக்கோவில், ஜேடர்பாளையம், ஆனங்கூர், பிலிக்கல்பாளையம், அண்ணாநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும்

கரும்புகளை விவசாயிகளிடமிருந்து கபிலர்மலை சுற்றுவட்டார பகுதிகளில் செயல்பட்டு வரும் 100க்கும் மேற்பட்ட வெல்லம் தயாரிக்கும் ஆலை அதிபர்கள் டன் ஒன்றுக்கு ரூ2400க்கு வாங்கிச் செல்கின்றனர்.

இந்த கரும்பை சாறு பிழிந்து அச்சுவெல்லம் மற்றும் உருண்டை வெல்லம் தயாரிக்கின்றனர். இதை உலர வைத்து, 30 கிலோ கொண்ட சிப்பங்களாக தயார் செய்கின்றனர். பின்னர் பிலிக்கல்பாளையத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்படும் வெல்ல ஏல மண்டியில் விற்பனை செய்கின்றனர். இந்த ஏலத்தில், நாமக்கல் கரூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வருகின்றனர். கடந்த வாரம் நடந்த ஏலத்தில், உருண்டை வெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம ரூ1100க்கும், பெரிய அச்சுவெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ1100 க்கும் ஏலம் போனது. நேற்று (புதன் கிழமை) நடந்த ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் ரூ1150க்கும், 30 கிலோ கொண்ட ஒரு அச்சுவெல்லம் ஒரு சிப்பம் ரூ1150க்கும் ஏலம் போனது. வெல்லம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## <u>தனியாரிடம் விதை வாங்கி ஏமாறாதீர்</u>

**உடுமலை,**: தனி நபரிடம் தரமற்ற விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என விவசாயிகளுக்கு அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உடுமலை விதை ஆய்வாளர் நிர்மலா விடுத்துள்ள அறிக்கை:

தென்மேற்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் விவசாயிகள் சாகுபடி முன்னேற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் சாகுபடி செய்யும் பயிர்களின் விதைகளை தேர்வு செய்வது மிக,மிக முக்கியம்.

விளம்பரத்தை நம்பி தனி நபரிடம் இருந்து தரமற்ற விதைகளை வாங்கி ஏமாந்து விடாதீர்கள். விதைகள் வாங்குமுன் கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தில் விற்பனை உரிமம் பெற்றுள்ளதா என்பதை கவனித்து வாங்க வேண்டும்.

அதேபோல்தான் மற்ற உரம்,பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கும்போதும் கவனம் தேவை என விதை இயக்குனர் பொன்னுசாமி அறிவுறுத்தி உள்ளார்.

விதை,உரம் விற்பனையாளர்கள் விலைப்பட்டியலை அனைவரின் பார்வைக்கு படும் படி வைத்திருக்க வேண்டும். விதை மற்றும் இடுபொருட்களை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.

உரிய ரசீது பெற்று விதை, உரம் மற்றும் இடுபொருட்களை விவசாயிகள் வாங்க வேண்டும்.

இவ்வாறு அதில் நிர்மலா கூறியிருக்கிறார்.

## போச்சம்பள்ளி பகுதியில் காளான் உற்பத்தியில் விவசாயிகள்ஆர்வம்

**போச்சம்பள்ளி**, : போச்சம்பள்ளி பகுதியில் தற்போது அங்கம்பட்டி, வெங்கி நாயக்கம்பட்டி, பாலே தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் காளான் உற்பத்தியில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த காலங்களில் காளான்களை தர்மபுரி, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி நகரங்களில் இருந்து வாங்கி வந்தனர்.

தற்போது போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் காளான் வளர்ப்பு அதிகரித்து வருவதால் உள்ளூரிலேயே கிடைக்கிறது. இதை விவசாயிகள் 200 கிராம் பாக்கெட் செய்து வாடிக்கையாளர்களிடம் நேரிடையாக ரூ40 க்கு விற்பனை செய்து வருகின்றனர். காளான்களில் சிப்பிகாளான், பட்டன் காளான் மற்றும் பால் காளான் என்று மூன்று ரகங்கள் உள்ளன.

இதில், 200 கிராம் காளான் ரூ35 முதல் ரூ40 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

## தரமான விதைகளை மட்டுமே விற்பனை செய்ய அறிவுறுத்தல்

**ஊட்டி,** : நீலகிரி மாவட்டத்தில் உள்ள விதை விற்பனையாளர்கள், உரிய விதிமுறைகளை கடைபிடித்து தரமான விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கோவை விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் கூறியிருப்பதாவது:நீலகிரி மாவட்டத்தில் உள்ள விதை விற்பனையாளர்கள் விதை விற்பனை உரிமத்தை விற்பனை நிலையத்தில் அனைவரின் பார்வையிலும் படும்படி வைக்க வேண்டும்.

விதை விற்பனையை எந்த இடத்தில் செய்வதாக உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த இடத்தில் மட்டும் தான் விதைகளை விற்பனை செய்ய வேண்டும்.

விதை விற்பனை நிலையத்தில் இருப்பில் உள்ள அனைத்து விதைகளின் ரகங்கள், விலை, இருப்பு போன்ற தகவல்களை அன்றாடம் தகவல் பலகை யில் எழுதி அனைவரின் பார்வைக்கு தெரியும்படி வைத்திருக்க வேண்டும்.

இருப்பு பதிவேடு மூன்றாண்டுகளுக்கு ஆய்வுக்கு உட்பட்டது. எனவே அதனை நன்கு பைண்டிங் செய்த பதிவேட்டில் எழுதி பராமரிக்க வேண்டும். இருப்பு பதிவேட்டின் முன்பக்கத்தில் பதிவேட்டின் பக்கங்களுக்கு சான்று இருக்க வேண்டும். விதை இருப்பு பதிவேட்டில் உள்ள இருப்பிற்கும், விற்பனை நிலையத்தில் உள்ள இருப்பிற்கும் வேறுபாடு இருக்க கூடாது.

விதை கொள்முதல் பட்டியலில் விதை விற்பனை செய்பவரின் விதை விற்பனை உரிம எண், விதை வாங்குபவரின் உரிம எண், விதை குவியல் எண் மற்றும் காலாவதி நாள் கண்டிப்பாக குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். விதை விற்பனை செய்யப்படும் போது கண்டிப்பாக விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். விற்பனை பட்டியலில் விதை விற்பனை உரிம எண், விற்பனை நிலைய முகவரி, பட்டியல் எண் மற்றும் தேதி, விதை வாங்குபவரின் பெயர், முழு முகவரி விதையின் பெயர், ரகம், நிலை ஆகியவை இருக்க வேண்டும். குவியல் எண், காலாவதி நாள் ஆகியவை இருக்க வேண் டும். விற்பனை பட்டியலில் விதை வாங்குபவரின் கையொப்பம் கண்டிப்பாக இடம்பெற வேண்டும். விதைகளை பூச்சி, பூஞ்சாண மருந்துகள், உரங்கள் அருகில் வைத்திருக்க கூடாது. நல்ல காற்றோட்ட வசதி உள்ள இடத்தில் மரக்கட்டைகள் மீது அடுக்கி பராமரிக்க வேண்டும். விதை விற்பனை குறித்த மாதாந்திர அறிக்கையை தவறாமல் படிவம் ஈ,ல் ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் கோவை விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்கும் படி கட்டாயம் அனுப்பப்பட வேண்டும். காலாவதியான விதை இருப்பு பதிவேடு தவறாமல் பராமரிக்கப்பட வேண்டும். தினசரி விற்பனையினை அன்றைய தினமே இருப்பு பதிவேட்டின் இருப்பில் இருந்து கழிக்க வேண்டும். விதை விற்பனையாளரால் விற்பனை செய்யப்படும் அனைத்து விதைகளுக்கும், பணி விதை மாதிரி அனுப்பி விதை பரிசோதனை முடிவுகள் பெறப்பட்ட பின்னரே விதை விற்பனை மேற்கொள்ள வேண்டும். விதை

கொள்முதல் பட்டியல் தனி கோப்பில் பராமரிக்கப்பட வேண்டும். விதை விற்பனை உரிமத்தினை காலாவதி தேதிக்கு முன்னரே புதுப்பித்து கொள்ள வேண்டும். இவ்வாறு விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் தெரிவித்துள்ளார்

## மண் மாதிரி எடுப்பது எப்படி? வேளாண்துறை ஆலோசனை

**பழநி,** : மண் மாதிரி சேகரிக்கும் முறை குறித்து வேளாண்துறையினர் கூறியிருப்பதாவது:

மண் ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால் போதும். அந்த மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால்தான், நிலத்தின் உண்மையான வளம் தெரியும். மண் மாதிரி எடுக்கும் போது சில அம்சங்களை பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு முறை பயிர் செய்வதற்கு முன்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும், பின்பு புதிய பயிருக்கு நிலத்தை தயார் செய்யும் முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில்தான், மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும். எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவைகளை மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானிய பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர் களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ வகை மரங்களுக்கு 6 அடி ஆழத்திலும் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். கால பயிர்களு 'க்ஷி' வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை ஒரு செமீ கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரை கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில்

போட்டுக் கட்ட வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன் பயிர், அடுத்து பயிரிடப் போகும் பயிர், பிரச்னை இருப்பின் அதன் விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## <u>பெரியகுளத்தில் எலுமிச்சை விலை கிடுகிடு உயர்வு</u>

**பெரியகுளம்**, : பெரியகுளத்தில் எலுமிச்சை விளைச்சல் பாதித்துள்ளதால் எலுமிச்சம்பழம் ஒன்றுக்கு ரூ.10 வரை விற்கப்படுகிறது. பெரியகுளம் அருகே கும்பக்கரை மலைப்பகுதியான வண்ணாத்திப்பாறை, அகமலை மலைப்பகுதியில் பெரியூர், சின்னூர், அகமலை, ஊரடி, ஊத்துக்காடு, பேச்சியம்மன்சோலை, அண்ணாநகர், அலங்காரம் உள்ளிட்ட பகுதிகளில் எலுமிச்சை முக்கிய விவசாயமாக பயிரிடப்பட்டுள்ளது. வெயிலின் தாக்கத்தால் எலுமிச்சை செடியில் பூப்பிடிப்பது தாமதமானது. மழை எதிர்பார்த்த அளவில் பெய்யாததால் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டு எலுமிச்சை காய் சிறிய அளவிலேயே இருந்தன. ஆனால் சில தினங்களுக்கு முன் காற்றோடு பெய்த மழையால் பூவும், மொட்டுகளும் அதிகளவில் உதிர்ந்தன. இதனால் எலுமிச்சை விளைச்சல் வெகுவாக பாதித்தது. பெரியகுளம் மார்க்கெட்டில் அமைந்துள்ள கமிஷன் கடைகளுக்கு வரும் எலுமிச்சை மூடைகள் 30 கிலோ எடையுள்ள மூடை ரூ.4 ஆயிரத்திற்கு ஏலம் போவதால் மார்க்கெட்டில் சில்லரை விலையில் ஒரு எலுமிச்சம்பழம் ரூ.10 வரை விற்கப்படுகிறது.

## <u>மானிய விலையில் விதை விநியோகம்</u>

**கமுதி**, : கமுதி வேளாண்மை துறை சார்பில் கோடை விவசாயத்திற்கு மானிய விலையில் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து கமுதி வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயசந்திரா கூறியதாவது:

கமுதி வட்டாரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கோடை மழை பெய்துள்ளது. தமிழகத்தில் அதிகபட்சமாக ஒரே நாளில் 70 மில்லி மீட்டர் மழை இங்கு பதிவானது. மேலும் தொடர்ந்து மழை பெய்ததால் இப்பகுதியில் கண்மாய்கள், குளங்கள், கிணறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த

வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு உளுந்து, பாசி உள்ளிட்ட பயறு வகைகளை பயிரிடலாம். 65 - 70 நாட்களில் குறைவான நீரினை பயன்படுத்தி நல்ல விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளது. குறுகிய கால ரகமான வம்பன் 3, வம்பன் 4 போன்ற உளுந்து வகைகளை விதைக்கலாம். இதற்கான விதைகள் கமுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படுகின்றன. தற்போது போதிய அளவில் விதைகள் இருப்பு உள்ளன. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சோயாபீன் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**



சோயாபீன் விலை உயர்ந்து வருகிறது. இதனால் எதிர்காலத்தில் அதிக ஆதாயம் வேண்டி பல விவசாயிகள் சோயாபீன் சாகுபடியில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். எனவே எதிர்வரும் வேளாண் பருவத்தில் (2014 ஜுலை – 2015 ஜுன்) சோயாபீன் பயிரிடும் பரப்பளவு கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சோயாபீன் ஒரு முக்கியமான எண்ணெய் வித்து. கோடை கால சாகுபடியில் இதன் பங்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது. கடந்த ஆண்டில் சோயாபீன் சாகுபடி பரப்பளவு வரலாறு காணாத அளவிற்கு 1.22 கோடி ஹெக்டேராக உயர்ந்தது. எனினும் கனமழையால் உற்பத்தி குறைந்து 1.02 கோடி டன்னாக சரிந்தது. இந்நிலையில் எதிர்வரும் பருவத்தில் சோயாபீன் சாகுபடி பரப்பளவு 4 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சோயாபீன் உற்பத்தி அதிகரிப்பதால் சமையல் எண்ணெய் இறக்குமதி குறையும். மேலும் புண்ணாக்கு ஏற்றுமதியும் அதிகரிக்கும். இந்த இரண்டு அம்சங்களுமே நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

உலக அளவில் சமையல் எண்ணெய் இறக்குமதியில் இந்தியா முதலிடத்தில் இருந்து வருகிறது. நடப்பு எண்ணெய் பருவத்தில் (2013 நவம்பர்– 2014 அக்டோபர்) சமையல் எண்ணெய் இறக்குமதி 4 சதவீதம் உயர்ந்து 1.08 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதியாகும் சமையல் எண்ணெயில் பாமாயில்தான் அதிகமாக உள்ளது.

## காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 30–ந் தேதி நடக்கிறது

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தை சேர்ந்த வேளாண் பெருமக்களுக்காக காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 30–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். இவ்வாறு அந்த செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 3 அடி உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



**அந்தியூர்**,

அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 3 அடி உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>3 அடி உயர்வு</u>

அந்தியூர் அருகே வரட்டுப்பள்ளம் அணை உள்ளது. இந்த அணை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் 2 மலைகளுக்கு இடையே கட்டப்பட்டது. பர்கூர் மலைப்பகுதியான தாமரைகரை மற்றும் தாளக்கரை ஆகிய பகுதிகள் வரட்டுப்பள்ளம் அணைக்கு நீர் ஆதாரமாக விளங்கி வருகின்றன. தாமரைகரை மற்றும் தாளக்கரையில் மழை பெய்யும் போது கும்பரவானிபள்ளம், கள்ளுப்பள்ளம், வரட்டுப்பள்ளம் ஆகிய 3 பள்ளங்களின் வழியாக மழைநீரானது வரட்டுப்பள்ளம் அணைக்கு வரும்.

நேற்று முன்தினம் பர்கூர் மலைப்பகுதி தாமரைகரை பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் வரட்டுப்பள்ளம் அணைக்கு காட்டாற்று வெள்ளம் அதிக அளவில் வந்தது. கடந்த சில நாட்களாக அணையின் நீர்மட்டம் 14 அடியாக இருந்து வந்தது. நேற்று முன்தினம் பெய்த மழையால் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 3 அடி உயர்ந்து தற்போது 17 அடியாக உள்ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் பெய்த மழையால் வனப்பகுதியில் உள்ள வனக்குட்டைகள் முழுமையாக நிரம்பி உள்ளன. இதனால் வனவிலங்குகள் தண்ணீர் குடிக்க நேற்று வரட்டுப்பள்ளம் அணைக்கு வராததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். வனப்பகுதியில் போதுமான தண்ணீர் உள்ளதால் இனி வனவிலங்குகள் வனப்பகுதியை விட்டு வெளியில் வராது.

இதேபோல் அணையில் மீன் பிடிக்கும் பணியிலும், மீன் வளர்க்கும் பணியிலும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வரட்டுப்பள்ளம் அணை மீன்பிடி தொழிலுக்கும், விவசாயத்திற்கும், வனவிலங்குகளுக்கும் குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகின்றன. இதனால் அணையின் முழு கொள்ளளவான 33½ அடி எப்போது உயரும் என பொதுமக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

**அடுத்த மாதம் இறுதிவரை நேந்திரன் வாழை விலை நிலையாக இருக்கும்**



உலக அளவில் முன்னணி பழப்பயிராக நேந்திரன் வாழை விளங்குகிறது. கடந்த 2013–ம் ஆண்டு உலக அளவில் 5 மில்லியன் எக்டேர் பரப்பளவில், 103.64 மில்லியன் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டது. 130–க்கும் மேற்பட்ட நாடுகளில், வெப்பம் மற்றும் மிதவெப்ப பகுதிகளில் வாழை பயிரிடப்பட்டு வருகிறது.

<u>வாழை சாகுபடி</u>

வாழை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ், ஈக்வெடார், பிரேசில் ஆகிய நாடுகள் உலக அளவின் முன்னணியில் உள்ளன. கடந்த 2013–ம் ஆண்டு உலக வாழை உற்பத்தியில் இந்தியா 25.5 சதவீதம் பங்களித்தது. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் வாழை சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி முறை கணிசமாக அதிகரித்து உள்ளது.

இந்தியாவில் கடந்த 2005–06–ம் ஆண்டுகளில் இருந்த 5.69 லட்சம் சாகுபடி பரப்பளவு, 2012–13–ம் ஆண்டில் 7.76 லட்சம் எக்டேராக உயர்ந்து உள்ளது. இதேபோல் 188.87 லட்சம் டன்னாக இருந்த உற்பத்தி, 34.2 டன்னாக அதிகரித்து உள்ளது. உலக வாழை ஏற்றுமதியில் இந்தியா 0.17 சதவீதம் பங்களிப்பை அளிக்கிறது.

<u>தமிழகம் முன்னிலை</u>

ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரபியா, ஓமன், பாகிஸ்தான் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து வாழை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜி–9, ரோபஸ்டா ரகங்களுக்கு சர்வதேச அளவில் தேவை அதிகரித்து வருகிறது. இந்தியாவின் வாழை உற்பத்தியில் தமிழகம் 19.37 சதவீதம் உற்பத்தி செய்து முன்னிலையில் உள்ளது. கடந்த 2012–13–ம் ஆண்டில் 1.11 லட்சம் எக்டேர் பரப்பளவில், 51.36 லட்சம் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகத்திற்கு அடுத்தபடியாக 17 சதவீதம் வாழை உற்பத்தி செய்து குஜராத் மாநிலமும், 13.5 சதவீதம் உற்பத்தி செய்து மராட்டிய மாநிலமும் உள்ளன. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் வாழை ரகங்களில் நேந்திரன் வாழை முக்கிய பயிர்களில் ஒன்றாக விளங்குகிறது.

<u>நேந்திரன் வாழை</u>

கோவை, ஈரோடு, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நேந்திரன் வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இந்த மாவட்டங்களில் நேந்திரன் வாழை சாகுபடி பரப்பளவு, 2012–13 ஆண்டுகளில் 24 ஆயிரத்து 667 எக்டேராக இருந்து, 2013–14–ம் ஆண்டுகளில் 24 ஆயிரத்து 869 எக்டேராக அதிகரித்து

உள்ளது. இதன்படி 0.81 சதவீதம் அதிகரித்து உள்ளது. நேந்திரன் வாழை பொதுவாக சிப்ஸ் தயாரிப்பதற்கு பயன்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் நேந்திரன் வாழை, கேரள மாநிலத்தில் அதிகம் விரும்பி வாங்கப்படுகிறது. உற்பத்தியாகும் நேந்திரன் வாழை சராசரியாக 8 முதல் 12 கிலோ வரை எடை கொண்டதாக உள்ளது. தமிழகத்தில் பொதுவாக ஏப்ரல்–மே மாதங்களிலும், அக்டோபர்–நவம்பர் மாதங்களிலும் நேந்திரன் வாழை நடவு செய்யப்படுகிறது. இந்த ரகம் காற்று சேதத்தை தாங்கி வளர்வதால், உயர் அடர் நடவு முறைக்கு பயன்படுத்தப்படுகிறது.

விலை நிலையாக இருக்கும்

சந்தைகளுக்கு நேந்திரன் வாழை வரத்து, ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் அதிக அளவும், ஜூலை–ஆகஸ்டு மாதங்களில் குறைந்த அளவும் காணப்படுகிறது. நேந்திரன் வாழையின் தற்போதைய சந்தை விலை கிலோவுக்கு ரூ.25 முதல் ரூ.28 வரை உள்ளது. இந்தநிலையில் வரும் மாதங்களில் நேந்திரன் வாழை சாகுபடி செய்த விவசாயிகள் விலை நிலவரத்தை அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்.

## கும்பகோணம் பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரம்



**கும்பகோணம்,**

கும்பகோணம் பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நெல்சாகுபடி

கும்பகோணத்தை சுற்றியுள்ள பல கிராமங்களில் 3-ம் போக நெல் சாகுபடி கடந்த ஜனவரி மாத இறுதியில் தொடங்கியது. இந்த சாகுபடி யில் ஏடிடி43 நெல் ரகத்தை விவசாயிகள் நடவு செய்த னர். தொடக்க காலத்தில் காவிரி தண்ணீர் ஓரளவு கிடைத்த போதும் நடவு பருவத்தில் இருந்து இந்த சாகுபடிக்கு மோட்டார் பம்புசெட் தண்ணீர்தான் உதவியது. நடவு, களை எடுத்தல், ரசாயன உரமிடுதல் ஆகிய நேரங்களின் போது மழை பெய்யவில்லை. கடுமையான வெயிலை தாங்கி பயிர்கள் வளர்ந்தன.

அறுவடை

அறுவடை காலமான தற்போது கடந்த சில வாரங்களுக்கு முன்பு நல்ல மழை பெய்தது. இதனால் அறுவடை வேலைகள் பாதிக்கும் நிலை உருவானது. இருந்தபோதும் பருவம் மாறியதால் அறுவடை பணிகள் மீண்டும் தொடங்கி தற்போது கும்பகோணம் கிராமப்பகுதிகளில் அறுவடை நடந்து வருகிறது.

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கும்ப கோணம் பகுதியில் 3-ம் போக நெல் அறுவடை பணி தற்போது நடைபெற்று வருகிறது. விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதால் எந்திரம் மூலம் அறுவடை நடைபெறுகிறது. இந்த எந்திரங்கள் நாள் ஒன்றுக்கு 15 ஏக்கர் வரை அறுவடை செய்கிறது. இதில் நெல் தனியா கவும், பதர் தனியாகவும் பிரிக்கும் வசதி உள்ளதால் கூலி ஆட்கள் அதிகமாக தேவைப்படு வதில்லை. 2, 3 ஆட்களின் உதவியோடு 10 ஏக்கர் வரை ஒரே நாளில் அறுவடை செய்ய முடிகிறது.

விலை குறைவு

கடந்த ஆண்டை ஒப்பிடும் போது நெல் விலை ஓரளவு குறைவாக இருப்பதால் விவசாயிகள் இந்த நெல்லை விற்பதற்கு தயக்கம் காட்டு கின்றனர். நெல்லை பாதுகாக்க முடியாத விவசாயிகள் ஆங்காங்கே உள்ள நெல் வியாபாரிகளிடம் உரிய விலைக்கு விற்று விடுகின்றனர் என்றார்.

## தஞ்சை மாவட்டத்தில் 29ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு



கும்பகோணத்தை அடுத்த கருவளச்சேரி கிராமத்தில் விவசாயி நடராஜன் என்பவரது பருத்தி தோட்டத்தில் கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்த போது எடுத்த படம்.

**கும்பகோணம்,**

தஞ்சை மாவட்டத்தில் 29ஆயிரம் எக்டேரில் குறு வை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக கலெக்டர் சுப்பையன் கூறி னார்.

கலெக்டர் ஆய்வு

தஞ்சை மாவட்ட கலெக்டர் என்.சுப்பையன் கும்பகோணம் அருகே உள்ள சாக்கோட்டை உயிர் உரங்கள் உற்பத்தி மையத்திற்கு நேற்று வந்தார். அங்குள்ள ஆய்வகம் மற்றும் உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, அசோஸ் பைரில்லம், ரைசோடியம், பாஸ்போ பாக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் தயாரிக்கப் படுகிறது என்றும், தீவிர தரக்கட்டுப்பாடு பரி சோதனைக்குட்பட்டு தரமான உயிர் உரங்கள் மட்டுமே விவசாயிகளுக்கு விநியோகிப் பதாக வேளாண்மை அதிகாரிகள்தெரி வித்தனர்.

மேலு ம் சிக்கன உரச்செலவு, துரித விதை முளைப்பு, நீடித் தான நிலையான மண்வளம், மாசற்ற சுற்றுச்சூழல், நோய் பூச்சி எதிர்ப்பு திறன், உயர் மகசூல் ஆகியவைகள் இந்த உயிர் உரங்களால் கிடைக்கும் எனவும், மாதத்திற்கு சராசரி யாக 6 முதல் 7 டன் உற்பத்தி செய்வ தாகவும்,¢ வருடத்திற்கு சுமார் 1 லட்சம் டன் உயிர் உரங்கள் தயாரிப்பதாகவும் தெரிவித்தனர்.

குறுவை சாகுபடி

பின்னர் கலெக்டர் சுப்பையன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டில் குறுவை பருவத்தில் 29ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதில் இதுவரை 4,250 ஹெக்டேரில் நடவு பணிகள் முடிந்துள்ளது. மேலும் நடக்க உள்ள நடவு பணிகளுக்காக 190 ஹெக்டேரில் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.

தற்போது சாகுபடி குறுவை நடைபெறாத இடங்களில் கரும்பு, பருத்தி, உளுந்து, பச்சை பயறு போன்ற பயிறு வகை தானியங்கள் உற்பத்தியை விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

பாபநாசம்

முன்னதாக பாபநாசம் தாலுகாவிற்கு உட்பட்ட ரகுநாதபுரம் ஊராட்சியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லும் குழாய் வழங்கும் திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடிக்கு தெளிப்பு நீர் பாசனம், உமையாள்புரம் ஊராட்சியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூலம் சுமார் 100 ஹெக்டேரில் 100 விவசாயிகள் சேர்ந்து உளுந்து சாகுபடி செய்யப்படுவதையும், கும்பகோணம் கருவளச் சேரியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின¢ கீழ் பருத்தி சாகுபடி செய்யப் படுவதையும் பார்வையிட்டு தண்ணீர் வசதிகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந் தார். தொடர்ந்து சாக் கோட்டை பசுந்தாள் உரப்பயிர் தக்கை பூண்டு விதை உற்பத்தி செய்யப் படுவதையும் ரூ.25லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டார். அந்த பணி களை விரைந்து முடிக்க அற¤வுறுத்தினார்.

அதிகாரிகள்

ஆய்வின்போது கும்ப கோணம் உதவி கலெக்டர் கோவிந்தராவ், வேளாண்மை துறை இணை இயக்குனர் (பொறுப்பு) ராமதாஸ், துணை இயக்குனர் சீனிவாசன்,

மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்க லிங்கம், உதவி இயக்குனர் லெட்சுமிகாந்தன், வேளாண்மை அலுவலர் கார்த்தி, உயிர் உர உற்பத்தி மையத்தின் வேளாண்மை அலுவலர்கள் உமாமகேஸ்வரி, கலைச்செல்வி, சரசு, ரெகுநாதபுரம் ஊராட்சி மன்றத்தலைவர் ஜெய்சங்கர் உள்பட பலர் உடன் இருந்தனர்.

**தஞ்சையில் இருந்து திருப்பூருக்கு 960 டன் நெல் மூட்டைகள்**



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 960 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக திருப்பூருக்கு அனுப்பப்பட்டன.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன.

அறுவடை செய்யப்பட்ட நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபகழகங்கள் மூலம் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நெல் மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சேமிப்புக்கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன. இது தவிர வெளி மாவட்டங்களுக்கு

லாரிகள் மூலமும், சரக்கு ரெயில் மூலமும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

960 டன்

தஞ்சையில் இருந்து நேற்று சரக்கு ரெயில் மூலம் 960 டன் நெல்மூட்டைகள் அரவைக்காக திருப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதற்காக பல்வேறு கொள்முதல் நிலையங்கள் மற்றும் சேமிப்புக்கிடங்குகளில் இருந்து லாரிகளில் நெல் மூட்டைகள் ஏற்றி வரப்பட்டு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

**<u>கால்நடை மருத்துவ படிப்புக்கான விண்ணப்பங்கள் வினியோகம்</u>**

மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் பண்ணை முருகானந்தன் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- மதுரை திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரி சாலையில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 5 வருட கால்நடை மருத்துவ படிப்பு, 4 வருட உணவு தொழில்நுட்பம் மற்றும் 4 வருட கோழியின உற்பத்தி தொழில்நுட்ப படிப்புகளுக் கான விண்ணப்பங்கள் கடந்த 12-ந்தேதி முதல் வினியோகிக்கப்பட்டு வருகிறது.

மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த மையத்தில் விண்ணப்பங்கள் வருகிற 30-ந்தேதி வரை வழங்கப்படுகிறது. மேற்கண்ட படிப்புகளுக்கு பிற்பட்ட வகுப்பினர் 65 சதவீத மதிப்பெண்களும், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 60 சதவீத மதிப்பெண்களும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் தேர்ச்சி பெற்றும் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப படிப்புகள் முடித்த பின் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>வாழையில் தண்டு கூன் வண்டு கட்டுப்படுத்துவது எப்படி?</u>**



வாழையில் தண்டு கூன் வண்டினைக் கட்டுப்படுத்து எப்படி? என்பது குறித்து பூச்சியல் துறை உதவிப் பேராசிரியர் இளஞ்செழியன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அம்பை நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியல் துறை உதவி பேராசிரியர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>வாழை</u>

முக்கனிகளுள் ஒன்றான வாழையானது உலக அளவில் 120 நாடுகளில் பயிரிடப்பட்டு வருகிறது. இந்தியாவில் வாழையானது தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மகராஷ்டிரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், ஒரிசா, குஜராத், மேற்குவங்காளம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. வாழையில் எளிதில் ஜீரணமாக்கூடிய மாவுச்சத்து மிக அதிக அளவில் உள்ளது.

மேலும் வைட்டமின் பி, சி, பொட்டாசியம், கால்சியம் மற்றும் மக்னீசியச் சத்துகளும் உள்ளன. வாழையில் கிழங்கு முதல் பூ வரை அனைத்து பாகங்களும் உணவாகவோ, தீவனமாகவோ, மருத்துவப் பொருளாகவோ பயன்படுத்தப்படுகிறது. வாழையின் மகசூலை குறைப்பதில் 30–க்கும் அதிகமான பூச்சிகள் பங்கு வகிக்கின்றன. வாழையை பல்வேறு வகையான பூச்சிகள்

தாக்கினாலும் அவற்றுள் தண்டு கூன் வண்டானது அதிக பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன.

<u>தண்டு கூன் வண்டு தாக்குதல்</u>

இவ்வண்டாது நேந்திரன், மொந்தன், விருப்பாட்சி மற்றும் ரோபஸ்டா வாழையினை அதிகமாக தாக்குகின்றது. இது தவிர செவ்வாழை, ரஸ்தாளி, பூவன், மற்றும் கற்பூரவள்ளி வகைகளையும் தாக்குகின்றது. இவ்வண்டுகள் ஐந்து முதல் ஆறு மாதமான மரங்களையே பெரும்பாலும் தாக்குகின்றன. இவை கன்றுகளைத் தாக்குவதில்லை. இவை தண்டினை விரும்பி உண்பதால் இதன் தாக்குதலானது 7–வது மாதத்திற்கு மேல் மிக அதிகமாக இருக்கும். பொதுவாக இவை 5 மாதத்திற்கு மேல் மிக நெருக்கமான நடவு செய்யப்பட்ட தோட்டங்களில் இவ்வண்டின் தாக்குதல் அதிகமாகக் காணப்படும்.

வெண்ணிற புழுக்கள் தண்டு மற்றும் இலைக்காம்பினை குடைந்து செல்லும். ஆனால் கிழங்கினுள் செல்வதில்லை. இவற்றின் தாக்குதலால் பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்து, நீர் போன்றவை தடைப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றிவிடும். இத்தகைய மரங்களில் இருந்து பெரும்பாலும் குலைகள் தோன்றுவது இல்லை. ஒருவேளை குலை தோன்றினாலும் குலைகள் சிறுத்தும், காய்கள் எண்ணிக்கையில் குறைந்தும் காணப்படும். இதனால் மரம் வலுவிழக்கிறது. லேசான காற்று அடித்தால் கூடி ஒடிந்து விடும். இதனால் 5 முதல் 70 சதவீதம் மகசூல் இழப்பு ஏற்படும்.

<u>வாழ்க்கை பருவம்</u>

தாய் வண்டானது தன்னுடைய மூக்கினால் குண்டூசி அளவுள்ள சிறிய துளைகளை வாழைத் தண்டில் ஏற்படுத்தி அவற்றுள் முட்டையிடுகிறது. இத்துளையில் இருந்து பழுப்பு நிறை பிசுபிசுப்பான திரவம் வெளிவந்து கொண்டிருக்கும்.

முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்களானது தண்டை தின்று தண்டின் உள்ளே கூட்டுப்புழுவாக மாறுகின்றன. பின்னர் கூட்டுப்புழுவில் இருந்து கருப்பு நிற வண்டானது வெளியே வரும்.

<u>கட்டுப்படுத்தும் முறைகள்</u>

காய்ந்த இலைகளையும், மரத்தின் பட்டைகளையும் நீக்கி தண்டுப்பாகத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட வயலில் இருந்து விதைக் கிழங்குகளை தேர்வு செய்யக்கூடாது. பக்கக்கன்றுகளை 30 நாட்களுக்கு ஒருமுறை நீக்க வேண்டும். வாழைத்தோட்டங்களில் ஆங்காங்கே வாழைத் தண்டினைப் பிளந்து நிலத்தில் வைப்பதின் மூலம் தாய் வண்டுகளின் நடமாட்டத்தைப் கண்காணிக்கலாம்.

மோனோகுரோட்டோபாஸ் 36 டயுள்யூ.எஸ்.சி. 1 மில்லி லிட்டர் மருந்தினை 1 லிட்டர் தண்ணீருடன் கலந்து தண்டின் மீது தெளிக்க வேண்டும்.

தண்டுத் துளைப்பான தாக்குதலில் இருந்து வாழையைப் பாதுகாக்க மோனோகுரோட்டோபாஸ் 36 டபுள்யூ.எஸ்.சி. 54 மில்லி லிட்டர் மருந்தினை 350 மில்லி லிட்டர் தண்ணீருடன் கலக்க வேண்டும். பின்னர் இக்கரைசலில் இருந்து 2 மில்லி லிட்டர் மருந்தினை 45 செ.மீ மற்றும் 2 மில்லி லிட்டர் மருந்தினை 150 செ.மீ. உயரத்தில் எதிர், எதிர்புறத்தில் தண்டினுள் ஊசி வழியாக (இதற்கென தனியாக வடிவமைக்கப்பட்டது) 30 டிகிரி சாய்வாக செலுத்த வேண்டும். இவ்வாறு ஒரு மரத்திற்கு 5 முதல் 8–வது மாதம் வரை ஒவ்வொரு மாதமும் ஊசி மூலம் மருந்து செலுத்துவதன் மூலம் கூன் வண்டின் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.